| 3. | நிதிசார் மீளாய்வு | | | |
| 3.1 | நிதிப் பெறுபேறுகள் | | | |

| | | |
|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினது டிசெம்பர்31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வைத்தியசாலைச் சபையின் பற்றாக்குறை 7பா 149,619,386 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 175,818,975 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறு ரூபா 26,199,589 அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வைத்திசாலையினது செயற்பாட்டுச் செலவினம் ரூபா 306,785,959 அதிகரித்தபோதும் ஆண்டிற்கான வருமானமும் ரூபா 340,926,448 அதிகரித்தமையே இவ்வதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்<br><br>மீளாய்வாண்டினது முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2013,2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 92,286,361 மற்றும் ரூபா 720,613,254 மிகை ஏற்பட்டிருந்ததுடன் 2015 தொடக்கம் 2017 வரை முறையே ரூபா 352,618,182 ரூபா 175,818,975 ரூபா 149,619,386 என பற்றாக்குறையே ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம் அரசாங்க வரி நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்ததன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,026,310,304 ஆகவிருந்த பங்களிப்பு மாற்றமடைந்து மீளாய்வாண்டளவில் ரூபா 1,477,876,821 வரை அதிகரித்திருந்தது. | |
| 4. | செயற்பாட்டு மீளாய்வு | |
| 4.1 | செயலாற்றல் | |
| 4.1.1 | திட்டமிடல்<br>-----------------------------------<br><br>மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் வார்ட் தொகுதி (Paying Ward Compex). ஆண் தனியார் விடுதிகள் (Male Nurses Quaters) வேலைத்தளம் (Workshop) கட்டிடம் என்பவற்றை நிர்மாணிப்பதற்கு முறையே ரூபா 1,300 மில்லியன் ரூபா 68 மில்லியன் ரூபா 85 மில்லியன் என ஒதுக்கப்பட்டிருந்த போதும் பிரதான பொருட் கொள்வனவுத் திட்டமிடல் இந்த நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகை முறையே ரூபா 750 மில்லியன் ரூபா 75 மில்லியன் ரூபா 105 மில்லியன் என்பன மாத்திரமே. | செயற்பாட்டு திட்டமிடலானது வைத்தியசாலையின் செயற்பட வேண்டிய சகல தீர்மானங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட ஒன்றாக காணப்படுகிறது. அதற்கேற்ப அது திட்டமிடல் பிரிவினால் தயாரிக்கப்பட்டுள்ளது. கொள்முதல் பிரிவும் 2017 ஆம் ஆண்டுக்கான கெகள்மதல் திட்டத்தை தயார் செய்யும் போது செயற்பாட்டு திட்டமிடலுக்குள் காணப்படும் சகல செயற்றிட்டங்களையும் உள்ளடக்கி 29,980/- மில்லியன் ரூபா பெறுமதியான திட்டம் ஒன்று மூலதன ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப பெண் தாதியர் தங்குமிடத்திற்காக 400 மில்லியன் ரூபா நிர்வாக கட்டடத்திற்காக 200 மில்லியன் ரூபாவும் ஆண் தாதியர் தங்குமிடத்திற்காக 80 மில்லியன் ரூபா என ஒதுக்கீட்டை கேட்டு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த வருடத்திற்காக 1000 மில்லியன் ரூபா மூலதன ஒதுக்கீடுகள் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது.<br>அதற்கேற்ப, அந்த வருடத்தில் செயற்படுத்தக்கூடியதாக இருந்தது. செயற்பாட்டு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த மற்றும் ஆரம்ப கொள்முதல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த சில செயற்றிட்டங்களை மட்டுமே அதற்கேற்ப மீண்டும் கொள்முதல் திட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 1000 மில்லியன் ரூபா பெறுமதியான |

| | | |
|---|---|---|
| | | செயற்றிட்டங்களுக்காக மீண்டும் தயார் செய்யப்பட்டது. அந்த திருத்தம் செய்யப்பட்ட திட்டத்தினுள் பெண் தாதியர் தங்குமிடம் மற்றும் நிர்வாகக் கட்டடம் உள்ளடக்கப்படவில்லை. அந்த இரு செயற்றிட்டங்களும் கொள்முதல் குழுவின் அனுமதியின் கீழ் நடைமுறைப்படுத்த வேண்டியிருந்ததனாலும் மற்றும் விலை மனுக்கோரல் நடைமுறை விதிகளுக்கு அமைவாக அந்த செயற்றிட்டங்கள் அதே ஆண்டுக்குள் விலைமனுக் கோரல் வழங்குதல் வரை அமுலில் இருக்காது எனும் எடுகோளின் அடிப்படையில் செயற்பாட்டு நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கேற்ப செயற்பாட்டு நடவடிக்கை திட்டத்தில் காணப்படும் சகல செயற்றிட்டங்களும் எதிர்பார்க்கப்பட்ட வருடத்திற்குள் அமுல்படுத்தலானது நடைமுறைக்கு சாத்தியமாக செய்ய முடியாமல் இருப்பது அதற்காக கிடைக்கப்பெறும் கொள்முதல் போதுமானதாகக் காணப்படாமையேயாகும். எவ்வாறாயினும் செயற்றிட்டங்களுக்கான மதிப்பீட்டுப் பெறுமதிகளுக்கிடையில் சில வித்தியாசங்கள் காணப்படுகின்றமையை ஏற்றுக் கொள்கின்ற அதே வேளை எதிர்காலத்தில் கூட்டிணைந்து சிறந்த முறையில் இதனை நிறைவேற்றுவதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| 4.1.2 | செயற்பாடுகளும் மீளாய்வுகளும><br>---<br>மீளாய்வாண்டுக்கெனத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பௌதீக நிதிசார் முன்னேற்ற அறிக்கையைப் பரிசீலிக்கையில் ரூபா 700 மில்லியன் கூட்டுத் தொகை மதீப்பீட்டுடனான 3 செயற்றிட்டங்களது பொருட் கொள்வனவு நடவடிக்கையில் தாமதம் மற்றும் ரூபா 153 மில்லியன் கூட்டுத்தெகையுடைய 2 செயற்றிட்டங்களது ஒப்பந்த நடவடிக்கைகளில் நிலவிய நலிவுகள் போன்ற காரணங்களால் குறித்த உடன்படிக்கை பிரகாரமான நிர்மாண வேலைகளில் 1 முதல் 10 மாத கால தாமதம் ஏற்பட்டிருந்தது. | குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கும் செயற்றிட்டங்களின் தாமதத்திற்கான காரணங்கள் உண்மையானவையாக அமைந்திருப்பதுடன் செயற்பாட்டு நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டங்களை நிறைவு செய்ய வேண்டிய திகதிகளில் நிறைவு செய்ய முடியாமல் இருப்பது அந்த காரணங்களினாலேயேயாகும். 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னேற்றம் பற்றி காட்டப்பட்டிருப்பதுடன் இதுவரை மேலுமொரு முன்னேற்றம் பற்றியும் காட்டப்பட்டிருக்கின்றது. அதற்கேற்ப 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதியாகும் போது கீழே காணப்படும் முன்னேற்றங்கள் எட்டப்பட்டுள்ளன.<br>i. கட்டடங்கள் 2 பகுதிகளைக் கொண்டதாகக் காணப்படுவதுடன் ஒரு பகுதியின் இரண்டாம் மாடியில் slab இடப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த பகுதியில் இரண்டாம் மாடிக்கு slab இடுவதற்கு தேவையான அவதானங்கள் செலுத்தப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

| | | |
|---|---|---|
| | | ii. இரண்டாம் மாடிக்கு slab இடப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. மூன்றாம் மாடியில் slab இடுவதற்கு தேவையான beam தூண்கள் இடும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br>iii. இரண்டாம் மாடிக்கு slab இடப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் முதலாம் மாடிக்கு slab இடும் வேலை ஆரம்பிக்கப்படவுள்ளது.<br>iv. கட்டடத்தை நிர்மாணிக்க முன்னர் வைத்தியசாலையின் வரையறை மதில்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அது 1000 அடி அளவில் நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் முதலாம் மாடியில் slab இடுவதற்கு தேவையான beam தூண்கள் இடும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br>v. தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசை பெற்றுக் கொடுக்க மின்சார சபையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய சில அறிவுறுத்தல்களின் காரணமாக தாமதம் ஏற்பட்டதுடன் தற்போதாகும் போது மதிப்பீட்டு குழுவின் சிபாரிசு கொள்முதல் குழுவின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது |
| **4.2** | முகாமைத்துவ செயற்பாடுகள்<br>---------------------------------------------------<br>2017 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வைத்திய சாலைக் கட்டணம் (Hospital charges) வருமானம் ரூபா 2,100,844,980 ஆகும். எனினும் மருந்துகளது சத்திரசிகிச்சை பொருட்களது கட்டணமும் தவிர ஏனைய கட்டணங்களை தீர்மானிப்பதற்கு விலை நிர்ணய குழு ஒன்று நியமிக்கப்பட்டிராததுடன் ஏனைய கட்டணங்களைத் தீர்மானிக்கும் விதம் மற்றும் அடிப்படை என்பன மென் அணி முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கவுமில்லை. அவ்வாறே சத்திரசிகிச்சை பல்வேறு வகை பரிசோதனைகள் மற்றும் ஏனைய சேவைகள் என்பவற்றிக்கான வைத்தியசாலைக் கட்டணம் அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டிருந்த போதும் அவற்றிக்கு முறையான அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை | வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சேவைகளுக்காக விலை நிர்ணயம் செய்யும் குழு இயங்கி வருகிறது. விலை நிர்ணய குழுவின் தலைவராக பிரதிப்பணிப்பாளர், சக நிரந்தர அங்கத்தவர்களாக திட்டமிடல் பிரிவிற்கு பொறுப்பாக இருக்கும் வைத்திய அதிகாரியும், கணக்காளரும் (வருமான மற்றும் நிர்வாகம்) அங்கம் வகிக்கிறார்கள். அதற்கு மேலதிகமாக விலை நிர்ணயத்திற்கு உரிய சேவையை வழங்கும் அலகின் பிரதிநிதி ஒருவரும் அந்த விலை நிர்ணய குழுவில் அங்கத்தவராகச் செயல்படுகிறார்.<br>இந்த விலைகளை நிர்ணயம் செய்து அதற்கு உரிய யோசனையை நிர்வாக குழுவினூடாக அங்கீகரிக்கும் முறையொன்று வைத்தியசாலைக்குள் பின்பற்றப்படுகின்றது.<br>இருப்பினும் இந்த விலை நிர்ணயம் வைத்தியசாலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சோதனைக்காக மட்டும் தற்போது வரையறுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டதற்கு ஏற்ப விலை நிர்ணயம் இந்த குழுவினூடாக விரிவான முறையில் சகல சேவைகளுக்காகவும் ஆரம்பிப்பதற்கு யோசனை காணப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 4.3 | (அ) | **செயற்பாட்டு நடவடிக்கைகள்**<br>**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**<br><br>வைத்தியசாலைக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்குதல் மற்றும் நோயாளர்களுக்கும் சிற்றூழியர்களுக்கும் உணவு வழங்குதல் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 2005 மே 28ஆந் திகதி 01-21/2015 ஆம் இலக்க சுகாதார, போசனை, தேசிய வைத்திய அமைச்சின் பொது சுற்றிக்கைக்கு அனுசரணையாக இவ் வேலைத் திட்டங்களுக்கான தகுந்த முறையான அனுசரணையாக இவ் வைத்தியசாலைக்கான தகுந்த விதிமுறைகளும் நடைமுறைகளும் உள்ளடக்கப்பட்ட அறிவுறுத்தல் கோவை ஒன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையினது அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. உலர் உணவுப் பொருட்களை வழங்குவது தொடர்பாக பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன | |
| | (i) | வாரத்திற்கான உணவு நிகழ்ச்சித் திட்டத்தை தயாரிப்பதற்கு நிறுவனத் தலைவர் உணவு முகாமைத்துவ குழுவின் உதவியை பெறுவதற்கும் தயாரிக்கப்பட்ட வார உணவு நிகழ்ச்சித் திட்டத்தை குறித்த பிரிவில் ஒப்படைப்பதற்கும் அதன் பிரகாரம் உலர் உணவை வழங்குவதற்குமான மாதாதந்தத் தேவையை தயார்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | (i) நோயாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு உணவு வழங்கும் போது சுகாதார அமைச்சின் சுற்றறிக்கைகளை பயன்படுத்துவதானது எமது நிறுவனத்தைப் பொறுத்தவரை நடைமுறைக்கு சாத்தியமற்ற கடினமான ஒரு விடயமாகும்.<br>காரணங்கள் :-<br>அரசாங்க வைத்தியசாலைகளில் நோயாளர் ஒருவர் அனுமதிக்கப்பட்டு முதல் 24 மணித்தியாலங்களுக்குள் உணவு வழங்க வேண்டிய பொறுப்பை ஏற்காததுடன், எமது வைத்தியசாலை நோயாளர்களிடமிருந்து பணத்தை அறவிடுவதனால் நோயாளி அனுமதிக்கப்பட்ட நேரத்திலிருந்து வைத்தியசாலையிலிருந்து வெளிறேும் வரை உணவுகளை வழங்குதல் வேண்டும்.<br>விஷேடமாக கட்டணம் செலுத்தும் சிகிச்சைக் களங்களில் நோயாளர்களின் வேண்டுகோளின் பேரில் உரிய மாற்றங்களை செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. (இதன்போது வைத்தியசாலைக்கு நஷ்டங்கள் ஏற்படாது.)<br>அதேபோல் ஒவ்வொரு நோயாளியின் விஷேட போஷாக்கு தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு அதற்கு ஏற்ற வகையில் மேலதிக உணவு அளவை தீர்மானித்து போஷாக்கு உணவு வழங்கும் அதிகாரிகளினால் மேற்கொள்ளப் படுகின்றது.<br>இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அநேகமான உணவு வகை நோயாளர்களின் போஷாக்கு தேவைப்பாடுகள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | உணவுகளின் அளவு மிகவும் வித்தியாசப்படுகின்றன.<br>உதாரணமாக :-<br>நீரிழிவு நோயாளி ஒருவருக்கு இறைச்சி / மீன் ஒரு வேளைக்கு வழங்கியிருப்பது 30g மட்டுமே அதாவது ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி / மீனை 33 நோயாளிகளுக்கு பகிர்ந்து கொடுத்தல் வேண்டும்.<br>சிறுநீரக நோயாளி ஒருவரின் நாளாந்த சக்தி தேவைப்பாடானது அண்ணளவாக 1800-2000 கிலோ கலோரியாக காணப்படுவதுடன் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சிறுநீரக நோயாளர்களின் உணவு வேளையில் நாளாந்த சக்தியின் அளவு 1300 கிலோ கலோரி ஆகும். அதே போல் அவர்களுடைய புரதத்தின் தேவைப்பாடானது 40g – 50g ஆகக் காணப்படுவதுடன் இதில் உள்ளடங்குவது நாளொன்றுக்கு 30g புரதமேயாகும்.<br>ஒரு நோயாளிக்கு காலை உணவு வேளைக்காக வழங்கப்பட்டிருப்பது கடலை / கௌபி / பயறு / உழுந்து ஆகும். அதாவது½ கோப்பையாகும். அதாவது ஒரு உணவு வேளைக்கு இந்த அளவைப் பெற்றுக் கொள்வதன் மூலம் அந்த வேளைக்கான போஷாக்குத் தேவைப்பாடு கிடைக்காமல் போவதைப் போன்றே அவர்களது பசியை தீர்ப்பதற்கு எந்த வகையிலும் போதுமானதாக இல்லை.<br>எமது வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது நோயாளிகளின் போஷாக்குத் தேவைப்பாட்டுக்கு ஏற்ப உணவு வகை போஷாக்குத் தொடர்பான அதிகாரிகளினால் பிரதான சமையல் நிபுணரின் உதவியுடன் தயாரிக்கும் செயற்பாடாகும். அந்த உணவு வகை தயாரிப்பு வைத்தியசாலையின் வழங்கல் பிரிவுக்கு பாரப்படுத்தப்படுகின்றது.<br>உதாரணமாக:<br>பாரமற்ற உணவு<br>Light Diet<br>சாதாரண உணவு<br>Normal Diet<br>நீரிழிவு உணவு<br>Diabetic Diet<br>சிறுநீரகம் பலவீனமான நோயாளிகளுக்கான உணவு<br>Renal Diet<br>இரத்தம் மாற்றம் செய்யும் நோயாளிகளின் உணவு Dialysis Diet<br><br>இதற்கு மேலதிகமான உணவு நோயாளிகளின் தேவைப்பாட்டிற்கேற்ப மேலதிக உணவாக ஓடர் கொடுக்கப்படும் (போஷாக்கு தொடர்பிலான அதிகாரியின் அறிவுறுத்தலின் படி) |
| | (ii) | ஒவ்வொரு வார்ட்டிலுமுள்ள வைத்திய உத்தியோகத்தர்கள் சகல நோயாளர்களுக்கும் தகுதியான உணவு அட்டவணையினை தயாரித்து அதனை குறிப்பிடவும், நோயாளர்களுக்கான மேலதிக | வைத்திய அதிகாரிகள் / தாதிய உத்தியோகத்தர்களினால் கட்டிலின் மேற்பகுதியில் உணவு வகைகள் குறிப்பிடப்படுவதுடன் சில சந்தர்ப்பங்களில் |

| | | | |
|---|---|---|---|
| | | உணவுத் தேவைகளைக் கட்டிலில் தொங்கும் அட்டவணைக் குறிப்பில் குறிப்பிட்டு தனிப்பட்ட ரீதியில் அவற்றைச் சான்றுறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மிகவும் அரிதாகவே இவை குறிப்பிடப்பட்டிருப்பதில்லை. தற்போது நடைமுறையில் உள்ளதற்கு அமைவாக கணனி மூலம் உணவு ஓடர் கொடுக்கும் போது உரிய நோயாளியின் உணவு வகையை கட்டாயமாக குறிப்பிடுதல் வேண்டும். |
| | (iii) | வைத்தியசாலையில் தங்கியிருக்கும் நோயாளிகளின் பொருட்டு ஒவ்வொரு மாத முதல் திகதியன்றும் புதிய உணவுச் சுற்றுக்களை தயாரித்தல், ஒவ்வொரு நோயாளியினதும் உணவு அட்டவணைப் பொழிப்பைத் தயாரித்து நாளொன்றிற்கு தேவையான உணவுச் சுற்றுக்களினது எண்ணிக்கையை கணிப்பிடுதல் மற்றும் அத்தினத்தில் உள்ளவாறான நோயாளர்களின் எண்ணிக்கையுடன் அதனை ஒப்பிட்டுப் பார்த்தல், மேலதிக உணவுக் (Extras) குறிப்புத் தாள்களை நாளாந்தம் சேகரித்தல் மற்றும் அவ்வுணவு தொடர்பான பொழிப்பை மாதிரிப் படிவத்தில் குறிப்பிட்ட வரிகளின் கீழ் குறித்துக் கொள்வதன் மூலம் நாளாந்தம் அவற்றை இணக்கம் செய்தல் என்பன நடைபெறவில்லை. | எமது வைத்தியசாலையின் ஒவ்வொரு சிகிச்சை களத்திலும் , பிரிவிலும் நாளாந்தம் மு.ப 9.30 க்கு முன்னர் உணவு ஓடர் கொடுக்கும் படிவம் ஒன்று தயார் செய்யப்படுவதுடன் அதனை சிகிச்சைக் களத்திற்குப் பொதுவாக இருக்கும் அதிகாரியின் அனுமதியுடன் வழங்கல் பிரிவுக்கும் மற்றும் சமையலறைக்கும் நாளாந்தம் அனுப்பி வைக்கப்படும். மூலப் பொருட்கள் கொள்வனவு முன்னைய நாள் இருக்கும் நோயாளிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் உணவு அன்றைய தினம் இருக்கும் சகல நோயாளிகளுக்கும் வழங்கப்பட வேண்டியிருப்பதால் முன்னைய தினத்தை விட நோயாளிகள் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பான கையிருப்பை பாவிக்கும் நிலையும் முன்னைய தினத்தை விட நோயாளிகள் குறையும் போது அந்த மூலப்பொருட்கள் மீண்டும் பாதுகாப்பான கையிருப்பை ஒரே நேரத்தில் பெற்றுக் கொடுப்பதிலிருந்து வீண்விரயம் குறைத்துக் கொள்ளப்படுகின்றது. |
| | (iv) | சமைத்த உணவு எஞ்சி அதன் காரணமாக அது விரயமாவது தொடர்பாக பரிசீலித்து அதற்கமைய உலர் உணவை ஓரளவு சதவீதத்தால் குறைத்துப் பெறுவதை உறுதி செய்யும் பதிவேடு பேணப்படவில்லை. | ஊழியர்களின் உணவு உட்கொள்ளலைக் கருத்தில் கொண்டு போஷாக்கு தொடர்பிலான அதிகாரிகளினால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பணிப்பாளரினால் ஊழியர்களின் உணவுகளின் விகிதம் குறைக்கப்பட்டது. |
| | (v) | எதிர்பாராத சந்தர்ப்பத்தில் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ளல் மற்றும் அவதானிக்கப்படும் குறைபாடுகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் போன்றன கோவைப்படுத்தப்படும் பதிவேடும் தகவல்களும் இருக்கவில்லை. | பணிப்பாளரின் அறிவுறுத்தலின் பேரில் செயற்பாடுகள் திறம்பட வள முகாமையாளரால் மேலெழுந்த வாரியான சோதனை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. |
| | (vi) | சமைத்த உணவை விநியோகிப்பதற்கு முன்பு அதன் மாதிரி காட்டப்பட்டதையும் வைத்தியசாலை ஊழியர்கள் தமது அட்டைகளைச் சமர்ப்பித்து உணவைப் பெற்றமை பரிசோதிக்கப்பட்டதையும் குறித்தளவிலான உணவு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டதையும் உறுதி செய்யும் பதிவேடு பேணப்படவில்லை. | அன்றாட பணிக்கு வருகை தரும் சிற்றூழியர்களுக்குரிய உணவு வேளைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கூப்பன் காட் வழங்கப்படுவதுடன் உணவுகளைப் பெற்றுக் கொடுக்கும் போது உணவுகளுக்குப் பொறுப்பாக இருக்கும் அதிகாரிகளினால் அந்த கூப்பன் காட்கள் மீண்டும் சேகரிக்கப்பட்டு அவை ஆவணப்படுத்தப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| | (vii) | குறைந்த கிரயத்தில் உலர் உணவுப் பொருட்களை பெறுவதற்கான கட்டளையைச் சமர்ப்பித்தல், அவற்றைப் பெறுதல், சமைத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான உணவு முகாமைத்துவ குழு ஒன்று சுழற்சி ரீதியில் இயங்கவில்லை. | மேற்படி காரணங்களால் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நடைமுறைக்கு சாத்தியமான முறையில் செயற்பட முடியாமல் போயிருந்தாலும் உணவுகள் தொடர்பில் தீர்மானங்கள் எடுப்பதற்காக உணவு தொடர்பிலான குழு ஒன்றை நியமிக்குமாறு பணிப்பாளரினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| | (viii) | உணவுப்பொருட்களுக்கான கட்டளையை வழங்குதல், கணக்கிலிடுதல், பதிவு செய்தல், நிர்வகித்தல் என்பனவற்றிற்குப் பொருத்தமான மாதிரிப் படிவம் அறிமுகம் செய்து வைக்கப்படவில்லை. | இந்த நடவடிக்கைகளுக்காக எமது வைத்தியசாலை நிர்வாகத்தினூடாக அங்கிகரிக்கப்பட்ட மாதிரிப் படிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. |
| | (ஆ) | 2016 நவம்பர் 30 ஆந் திகதி ரூபா 23,544,099 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட சிகிச்சைக் கூட கழிவுகளை எரியூட்டும் இயந்திரம் (Incinerator) மாதாந்தம் ரூபா 900,000 வீதப்படி எதிர்வரும் மூன்றாண்டுகளுக்கு 2017 ஆகஸ்ட் 01 தொடக்கம் வெளிநிறுவனம் ஒன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு, | |
| | (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 774 ஆம் நிதிப் பிரமாணத்தில் குறிப்பிட்டவாறு கேள்வி நடைமுறை கடைப்பிடிக்கப்படாது இயந்திரத்தை வாடகைக்கு வழங்கிய நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. | GFC Waste Management (Pvt) Ltd நிறுவனமானது பல ஆண்டுகளாக வைத்தியசாலையின் சிகிச்சைகளின் போதான கழிவுப் பொருட்களை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன் இந்த இயந்திரத்தின் உயர்ந்தபட்ச கொள்ளளவை பயன்படுத்தி ஏனைய வைத்தியசாலைகளிலும் சிகிச்சையின் போதான கழிவுப் பொருட்களை அகற்றக் கூடியதாக இருக்கும் இயலுமையை பிரயோசனப்படுத்தி ஏனைய வைத்தியசாலைகளில் சிகிச்சையின் போதான கழிவுப் பொருட்களை சேகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் , அந்த கழிவுப் பொருட்களை அகற்றும் நடவடிக்கைக்காக வைத்தியசாலையின் பணியாட்டொகுதியினரை ஈடுபடுத்தி அல்லது அவர்களது பணியாட்டொகுதியினரூடாக மேற்கொள்வதற்கும் அந்த நிறுவனத்தினாலும் சுமார் 15 மில்லியன் ரூபா பெறுமதியான பணத்தொகையை முதலீடு செய்வதற்கும் இணங்கி Public Private Partnership (PPP)யோசனை ஒன்றை பணிப்பாளர் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>ஒரு முன்னோடி செயற்றிட்டமாக (Pilot Project) அந்த நிறுவனம் தற்போது வைத்தியசாலையுடன் பல வருட காலங்களாக மிகவும் நம்பிக்கையான முறையில் இதனை மேற்கொண்டு வந்தமை பற்றிய விடயத்தையும் கருத்திற் கொண்டு அதேபோல் இந்த செயற்பாட்டை மேற்கொள்ளும் இலங்கையின் ஒரே நிறுவனமான Encare (pvt) Ltd (Sisiliana) நிறுவனமானது சுகாதார சேவைகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | பணிப்பாளர் நாயகத்தின் கட்டளைக்கு அமைவாக அந்த வருடத்தின் ஆரம்ப நிலைப் பகுதியில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு முன்வந்திருந்த போதிலும் அந்த செயற்பாட்டை முறையாக நிறைவேற்றாமல் வைத்தியசாலைக்கு மிகவும் அசௌகரியமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தமையால் இந்த முன்னோடிச் செயற்றிட்டத்தை GFC Waste Management (Pvt) Ltd நிறுவனத்துடன் இணைந்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. |
| | (ii) | 2017 யூலை 28 ஆந் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம், இயந்திரத்தை வாடகைக்கு பெற்ற நிறுவனம் மாதாந்தம் வைத்தியசாலைக்குச் செலுத்த வேண்டிய வாடகை ரூபா 900,000 ஆகும். எவ்வாறாயினும், 2017 ஆகஸ்ட் 01 முதல் 2018 யூன் 30 ஆந் திகதியளவிலும் அறவீடு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போதாகும் போது வைத்தியசாலையினால் GFC Waste Management (Pvt) Ltd நிறுவனத்திற்கு 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை இன்வொய்ஸ் விநியோகிக்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் சிகிச்சையின் போதான கழிவுப் பொருட்களை அகற்றுவது சம்பந்தமாக ஏற்பட்ட சிக்கல்கள் தொடர்பில் குழு ஒன்றினூடாக விசாரணை செய்து விசாரணை அறிக்கை ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதுடன் சரியான ஒரு ஆய்வு செய்யப்படாமல் இரு தரப்பினராலும் ஒப்பந்தம் ஒன்றிற்கு வந்திருப்பதாக அந்த விசாரணையில் இனங்காணப்பட்டுள்ளது. அதற்கேற்ப விசாரணை அறிக்கையின் சிபாரிசுகள் பணிப்பாளர் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபையின் தீர்மான இலக்கம் 427:08:1 க்கு அமைவாக 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை மாதம் ஒன்றிற்கு 150,000 ரூபா அடிப்படையில் மற்றும் 2018ம் ஆண்டு யூலை மாதம் முதல் 2018ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை மாதமொன்றிற்கு ரூ.450,000 அடிப்படையில் அந்த நிறுவனத்திடமிருந்து கடலில் பணத்தை அறவிட்டுக் கொள்ள தீர்மானம் எடுக்கப்பட்டது. |
| | (iii) | இயந்திரத்தை ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் இயந்திரத்தில் இருந்த 3,644 லீட்டர் மண்ணெண்ணையின் கிரயமாகிய ரூபா 174,902 ஒப்பந்தக்காரரிமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த இயந்திரத்தை அந்த நிறுவனத்திடம் பாரப்படுத்தும் போது காணப்பட்ட மண்ணெண்ணையின் அளவிற்கேற்ப வைத்தியசாலைக்கு அறவிட்டுக் கொள்வதற்காக 2017. 12. 28 ஆம் திகதி இன்வொய்ஸ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் இதுவரை அதற்குரிய ரூ.174,902.40 பெறுமதியான பணத்தொகை வைத்தியசாலைக்கு செலுத்தப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். அந்தப் பணத்தொகையை உடனடியாக அறவிட்டுக்கொள்ள அல்லது வாய்மூலமாக இணங்கிக் கொண்டதற்கு அமைவாக சிகிச்சையின் போதான கழிவுப் பொருட்களை அகற்றும் இயந்திரத்தை ஒப்பந்தம் நிறைவடைந்து மீண்டும் வைத்தியசாலைக்கு கையளிக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | | | சந்தர்ப்பத்தில் அந்த மண்ணெண்ணையின் அளவுக்கு சமனான அளவை ஏற்றுக் கொள்வதற்கு ஒப்பந்தத்தில் திருத்தம் செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கின்றேன். |
| | (iv) | வைத்தியசாலை நாளாந்தம் வெளியேற்றப்படும் இரசாயனக் கழிவுகள் 250 கிலோகிராம் முதல் 300 கிலோகிராம் வரையிலானவை மாத்திரமே ஆயினும், அது தொடர்பாக முறையான ஆய்வு மேற்கொள்ளாது நாளாந்தம் ஏறக்குறைய 1,200 கிலோ கிராம் செயலாற்றக் கூடிய இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2016 டிசெம்பர் 01 முதல் 2017 டிசெம்பர் 31 வரையிலான 13 மாத காலத்தின்போது எரியூட்டப்பட்ட கழிவுகள் 184,187 கிலோகிராம் மாத்திரமே ஆகையால் இயந்திரத்தின் முழு இயலளவில் 39 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. ஏனைய தனியார் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களது இரசாயன கழிவுகளைப் பெற்று அவற்றை எரியூட்டும் எதிர்பார்ப்புடன் இயந்திரம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தபோதும், எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறவில்லை. | வைத்தியசாலையின் நாளாந்தம் சாதாரணமாக சிகிச்சையின் போது ஏற்படும் கழிவுப் பொருட்களின் அளவு சுமார் 300 கிலோ கிராமாகக் காணப்படுகின்ற போதிலும் வெளிநிறுவனங்களின் சிகிச்சையின் போது ஏற்படும் கழிவுப் பொருட்களை அகற்றி வைத்தியசாலைக்கு மேலதிக இலாபத்தினை சம்பாதிக்கும் நோக்குடன் இந்த இயந்திரத்தை விலைக்கு வாங்கியிருப்பதனால் நாளொன்றிற்கு 1200 கிலோ கிராம் கொள்ளளவைக் கொண்ட இந்த இயந்திரம் அதற்கு பொருத்தமான ஒரு இயந்திரமாகும். மாதாந்த வாடகை அடிப்படையில் தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதும் அந்த நோக்கத்தை நிறைவேற்றும் அபிலாசையிலேயே. அதற்கேற்ப தற்போதாகும் போது ஆசிரி வைத்தியசாலை, தலவத்துக்கொட ஹேமாஸ் வைத்தியசாலை, காசல் வைத்தியசாலை, மாத்தறை பொது வைத்தியசாலை போன்ற தனியார் மற்றும் அரச வைத்தியசாலைகளின் சிகிச்சையின் போதான கழிவுப் பொருட்களை அகற்றுவதாகவும், நாளொன்றுக்கு 900 முதல் 1100 வரையிலான அளவை அகற்றுவதாகவும் அறியத்தருகின்றேன். |
| 4.4 | பதவியணி நிர்வாகம்<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (அ) | வைத்தியசாலையின் நிரந்தரப் பதவியணியில் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல், தரப்படுத்தல் போன்ற முறையான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளைத் தயாரித்து அதனை அங்கீகரித்துக் கொள்வதற்கு 2017 டிசம்பர் 31 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைத்தியசாலையின் நிரந்தர பணியாட்தொகுதியின் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல், பதவி உயர்வு வழங்கல் மற்றும் தரப்படுத்துதல் தொடர்பில் முறையான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு வழங்கும் நடைமுறைக் கோவை தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. தனிப்பட்ட பணியாட்தொகுதியின் (PL1, PL2,PL3) ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு வழங்குதல் மற்றும் தரப்படுத்துதல் சம்மந்தமாக அனுமதியைப் பெற்றிருப்பதுடன் ஏனைய பணியாட்தொகுதிக்கு தேவையான ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு மற்றும் தரப்படுத்தல் சம்மந்தமான அனுமதியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| | (ஆ) | 2015 மே 22 ஆந் திகதிய பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்தின் பிரகாரம், தகவல் தொழில்நுட்ப மதியுரையாளர் (IT Consultant) ஒருவர் பணிப்பொறுப்பு ஒப்படைப்பு அடிப்படையில் (Assignment Basis) 2015 | |

| | | | |
|---|---|---|---|
| | | யூன் 08 தொடக்கம் ஆட்சேர்க்கப்பட்டு மாதாந்தம் ரூபா 120,000 வீதம் 2017 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியின்போது மொத்தப் படியாக ரூபா 3,720,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு. | |
| | (i) | குறித்த நியமனக் கடிதத்தின் பிரகாரம், வாரத்தில் 3 நாட்கள் 2 முதல் 4 மணித்தியாலங்கள் இவ்வுத்தியோத்தர் வைத்தியசாலையில் கடமையாற்ற வேண்டியிருந்தபோதும், சேவையில் ஈடுபட்டமை மற்றும் எதிர்பார்த்த சேவை நிறைவேறியமை தொடர்பாக மேற்பார்வை உத்தியோகத்தரால் உறுதி செய்யப்பட்டதன் பின்னரே மதாந்தப்படி வழங்கப்பட வேண்டும். எனினும், சேவைக்குச் சமூகமளித்தமை தொடர்பாக எழுத்து மூலச்சான்று உறுதிப்படுத்தப்படாததும் சேவை நிறைவேறியமை உறுதி செய்யப்படாமலும் படி வழங்கப்பட்டிருந்தது. | தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் திரு. நுவன் தெஹிகஸ்பிட்டிய அவர்கள் 2015. 06. 08 ஆம் திகதி முதல் இந்த வைத்தியசாலையில் கடமைக்கு சமூகமளித்ததுடன் அவரது வருகை மற்றும் வெளியேற்றம் வைத்தியசாலைப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவருக்காக ஒரு வரவுப் பதிவேடு பேணப்பட்டு வருகின்றது. |
| | (ii) | நியமனக் கடிதத்தின் பிரகாரம், தற்போதுள்ள தகவல் தொழில்நுட்ப முறைமையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து அவற்றைச் சீராக்குவதற்கும் கணக்கீடு மற்றும் வைத்தியசாலைக் கட்டணப் பட்டியலைத் தயாரித்தல். (Systolic and Accpac) தொடர்பான கணனி மென் அணியை வெற்றிகரமாக அமுலாக்குவதற்கு உதவியளித்தல், அதன்போது இனங்காணப்படும் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான தீர்வு என்பன தொடர்பான அறிக்கைகளை முகாமைத்துவத்தின் தேவைக்கேற்ப மதாந்தம் வழங்க வேண்டியதுடன், அவ்வாறான அறிக்கைகள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டமை புலனாகாதிருந்தது. | இந்த அதிகாரியினால் ஆற்றப்பட்ட விடயங்கள் தொடர்பில் அவரது தகவல் தொழில்நுட்ப ஆலோசகராக அவரால் பூரணப்படுத்தப்பட்ட பணிகள், இனங்காணப்பட்ட குறைபாடுகள், சிக்கல்கள், மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான தீர்வுகள் தொடர்பில் ஒவ்வொரு மாத இறுதியிலும் வைத்தியசாலை நிர்வாகத்துடன் இணைந்து நிர்வாகத்திற்கு அறியப்படுத்தி கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அதன் போது விசேடமாக விடயங்களுக்கு உறுதியாக பங்களிப்பை வழங்கும் சேவை பெறுநர்கள் பற்றி கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன. |
| | (iii) | ஆரம்பத்தில் 6 மாதங்களுக்கான நியமனமே வழங்கப்பட்டிருந்தபோதும், பின்னர் 6 மாதங்களுக்கு ஒருமுறை சேவைக்காலம் நீடிக்கப்பட்டிருந்தபோதும், கணக்கீடு மற்றும் விலைப்பட்டியல் தயாரிப்பு தொடர்பான கணனி முறைக் குறைபாடுகள் இனங்காணப்பட்டும் பிரச்சனைகளுக்கான தீர்வு சமர்ப்பிக்கப்பட்டும் இருந்தமை கணக்காய்வில் உறுதி செய்யப்படவில்லை. | இடையிடையே கூட்டங்களை நடாத்தி வைத்தியசாலை நிர்வாகத்திற்கு அறியப்படுத்தி நிலவும் நிலைமையில் இதுவரைப் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் முன்னேற்றத்தையும் பிழைகளுடன் கூடிய நிலைமைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் யாவை? என்பன பற்றி வைத்தியசாலை நிர்வாகத்திற்கு அறியப்படுத்தி 2015. 60. 08 ஆம் திகதி முதல் 2017. 12. 07 ஆம் திகதி வரையான காலம் தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் திரு நுவன் தெஹிகஸ்பிட்டிய அவர்கள் நிறுவனத்தில் பணியாற்றி இருக்கின்றார். |
| 5. | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி | | |
| 5.1 | நிலைத்து நிற்கவல்ல நோக்கத்தை எய்துதல் | | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை கொள்வதானது அமைச்சு மற்றும் திணைக்கள மட்டத்தில் இடம் பெறும் ஒன்றாகும். இது எமது வைத்தியசாலை மட்டத்தில் தனியாக முன்னெடுத்துச் |

| | | | |
|---|---|---|---|
| | 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ /17 ஆம் இலக்க தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் " 2030 நிகழ்ச்சி நிரல்" தொடர்பாக வைத்தியசாலைச் சபை அறிந்திராமையால் தமது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் தொடர்பான நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்கள், இலக்கு மற்றும் அதன் இலக்கை எய்தக்கூடிய வழிவகைகளையும் இலக்கை எய்துவதையும் அளவிடுவதற்கான சுட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | செல்லும் வேலைத்திட்டமல்ல. மேற்படி வேலைத்திட்டத்துடன் ஒப்பீடு செய்து எமது வைத்தியசாலை தனியாக ஒரு நிறுவனமாக இந்த வேலைத்திட்டத்திற்கு ஒத்திசைவாக செல்வது நடைமுறைக்கு சாத்தியமற்ற ஒன்றாகும். மேலும் எமது வைத்தியசாலையில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சரியாக தயார் செய்யப்பட்ட கூட்டிணைந்த திட்டமொன்றின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஏனைய வைத்தியசாலைகளும் உரிய நிலைபேறான அபிவிருத்தி வேலைத்திட்டங்களுடன் இணைந்து கொள்வது அமைச்சுக்கள், திணைக்களங்களினூடாகவேயன்றி தனித்தனியாக இல்லை. |
| 6. | கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும | | |
| 6.1 | பொருட்கொள்வனவும் ஒப்பந்தச் செயற்பாடுகளும் | | |
| 6.1.1 | பொருட்கொள்வனவு | | |
| | (அ) | ஒப்பந்தப் பெறுமதியான ரூபா 53,833,744 உடனான 05 படுக்கை மின்தூக்கிகளை (Bed Lift) கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் முன்னைய ஆண்டில் தனியார் கம்பனி ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத் தொகையின் 83 சதவீதமான ரூபா 44,618,950 கொடுப்பனவு செய்யப்பட்ட திகதி 2017 பெப்ரவரி 17 ஆகும். இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு, | |
| | (i) | செயற்பட்டவாறிருந்த 05 பழைய மின்தூக்கிகள் குறைபாடுகள் உள்ளவையாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டு அவை கழற்றி அகற்றப்பட்டிருந்தன. எனினும், அவ்வாறு கழற்றி அகற்றுவதற்கு 770 ஆம் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தரையும் உள்ளடக்கிய கணிப்புச் சபையினது சிபாரிசு பெறப்பட்டிருக்கவில்லை. | மின் உயர்த்தி இயக்கிகளில் குறைபாடுகள் காணப்பட்டமை உண்மையே ஆனால் இந்த மின் உயர்த்தி 33 வருடங்கள் பழமைவாய்ந்ததும் வைத்தியசாலையை ஆரம்பித்த போது பெபாருத்தப்பட்ட மின் உயர்த்தியும் ஆகும். கடந்த சில வருட காலங்களாக இந்த மின் உயர்த்திக்கான பராமரிப்புச் செலவு அதிகமாக காணப்பட்டதுடன் இயங்கும் போது பல்வேறு சிக்கல்கள் தோன்றிய சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. பல சந்தர்ப்பங்களில் சில கீழ்ப் பகுதியில் மின் உயர்த்தியை நிறுத்தி வைக்கும் சந்தர்ப்பங்களில் அந்த மாடியின் அடி மட்டத்தை விட உயரத்தில் அல்லது கீழாக மின் உயர்த்தியின் அடிப்பகுதியில் நிற்பதன் காரணமாக நோயாளர்களை எடுத்துச் செல்லும் கட்டில்கள் மற்றும் சக்கர நாற்காலிகளை மின் உயர்த்திக்குள் எடுப்பதோ அல்லது வெளியே எடுப்பதோ கடினமாகக் காணப்பட்டது. அது மிகவும் கவலைக்கிடமான நோயாளர்களை மிகவும் பாரதூரமாக பாதிக்கும் ஒரு விடயமாகும்.<br><br>இத்தகைய விடயங்களைக் கருத்திற் கொண்டு சில வருட காலமாக புதியதொரு மின் உயர்த்தியை விலைக்குக் கொள்வனவு செய்ய திட்டமிட்டபோதிலும் உரிய ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறாமையினால் அதனை நடைமுறைப்படுத்த இயலாமல் போனது. ஆனால் 2016ம் ஆண்டில் ஒதுக்கீடுகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | கிடைக்கப் பெற்றதன் காரணமாக இது நடைமுறைப்படுத்தப்பட்டது.<br><br>இதன் போது பிழைகளுடன் கூடியதாக உள்ளது என்பதற்கு தொழில்நுட்ப அதிகாரி ஒருவரின் சிபாரிசு பெற்றுக் கொள்ளத் தேவையில்லை என்பது கருத்தாகும். நடைமுறையில் இயங்குதலில் காணப்பட்ட குறைபாடுகள் நோயாளர் பராமரிப்புச் சேவையில் நேரடியாக தாக்கத்தைச் செலுத்துவதனால் பழைய மின் உயர்த்தியை அகற்றி புதிய மின் உயர்த்தியை பொருத்தியமை பிழையாக தென்படவில்லை. மேலும் இத்தகைய இயந்திரங்கள் முழுமையாக இயங்காததன் பின்னர் விலைக்கு கொள்வனவு செய்வது நடைமுறையில் கடினமான காரியமாகும். உரிய ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொள்ளுதலானது விலைமனுக் கோரல் கோவையைப் பின்பற்றி வழங்குநர் ஒருவரை தேர்ந்தெடுத்தல் மற்றும் பொருத்துவதற்கு பாரிய கால எல்லை எடுப்பதால் முன்னாயத்தத்துடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு அபாய நிலையைக் குறைக்கும் வண்ணம் நடந்து கொள்வது<br>நோயாளர் பராமரிப்பு சேவையை நடாத்திவரும் வைத்தியசாலை ஒன்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். மேலும் இந்த இயந்திரம் 100% இயங்கு நிலையில் காணப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளவேண்டும். |
| | (ii) | புதிய மின்தூக்கியைக் கொள்வனவு செய்வதற்குரிய அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டி கோவையின் 6.3.6 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் குறித்த மாதிரிப் படிவத்தில் கேள்விகளைத் திறக்கும் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட வேண்டுமாயினும் அதற்கான மாதிரி படிவம் பயன்பட்டிராததுடன் பேணப்பட்ட கேள்விகளைத் திறப்பதற்கான அறிக்கையைத் திறக்கும் குழுவினது அங்கத்தவர் எவரும் கைச்சாத்திட்டிருக்கவுமில்லை. | உரிய மாதிரிப் படிவங்கள் சில பேணப்பட்டு வருகின்றன விலைமனுக் கோரல் திறந்து வைக்கும் செயற்பாடு இரண்டு அதிகாரிகளினால்<br>மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் அவர்கள் விலைமனுக் கோரல் சேவைகளிலும் கையொப்பமிட்டுள்ளனர். ஆனால் விலைமனுக் கோரல் திறந்து வைக்கும் போது விலைமனுக் கோருபவரின் ஆவணம் மற்றும் வருகை பதிவு செய்யப்படும் ஆவணப் புத்தகத்தில் அவர்களுடைய கையொப்பங்கள் இடப்பட்டிருக்கவில்லை. அது தவறு என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் தற்போதாகும் போது அத்தகைய குறைபாடுகளை நிவர்த்தி செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட்டுக் கூற வேண்டும்.<br>மேலும், திறந்து வைத்தலுக்குரிய சகல படிவங்களையும் பேணிச் செல்வது நடைமுறையில் கடினமான காரியமாகக் காணப்படுகிறது. வாரத்திற்கு ஒரு முறை விலைமனுக் கோரலை திறந்து வைப்பதற்காக ஒதுக்கப்பட்டிருப்பதுடன் அதன் போது விலைமனுக் கோரல் விலை சமர்ப்பிப்பு ஆவணங்கள் 10 ற்கும் மேற்பட்ட அளவு திறந்து வைக்கப்படுகின்றன.<br>அந்த சகல தரவுகளையும் உரிய ஆவணங்களில் பதிவு செய்து வைப்பது கடினமான காரியமாகக் காணப்படுகின்றது. இருப்பினும் அதற்குச் சமனான படிவங்கள் விநியோகப் பிரிவினால் தயார் செய்யப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | | மதிப்பீட்டுக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. எவ்வாறிருப்பினும் எதிர்காலத்தில் இயலுமானவரை உரிய ஆவணங்களைப் பேணிச் செல்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| | (iii) | கேள்விக்களுக்கான ஆவணங்களில் உள்ளடக்கப்பட்ட மாதிரி வடிவங்களுக்கமைய உற்பத்தி செய்யும் நாட்டிற்கு வெளியே குறித்த மின்தூக்கியை பயன்படுத்துவது தொடர்பான செயலாற்றல் சான்றுறுதியையும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சுயாதீன பரிசோதனை நிறுவனம் ஒன்றிடமிருந்து பெறப்பட்ட இயந்திரம் முழுவதற்குமான பரிசோதனைச் சான்றிதழையும் கேள்வியைச் சமர்ப்பித்தவர் சமர்ப்பிக்காதபோதும், அது கருத்திற் கொள்ளப்படாது கேள்வியை வழங்கியவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். | விலைமனுக் கோருபவரின் Inspection and test report இல் traction machine சான்றிழில் fire rated doors ஐ தவிர ஏனைய சகல பாகங்களும் traction machine ற்கு உரிய பாகங்களாகக் காணப்படுவதால் அந்தச் சான்றிதழ்கள் யாவும் உள்ளடங்குகின்றன. PS Jayson and Partners எனும் ஆலோசனை வழங்கும் கம்பனியினால் இந்த மின் உயர்த்தியை விலைக்கு கொள்வனவு செய்வதற்கான வழங்கல், நிறுவுதல் மற்றும் இயங்கு நிலைக்கு உட்படுத்தி , பரீட்சித்துப் பார்த்தல் செயற்பாடு மேற்கொள்ளபபட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது (சகலமின் உயர்த்திகளுக்கும்) |
| | (iv) | தொழில்நுட்ப மாதிரி படிவங்களில் குறிப்பிட்டவாறு ஒப்பந்தம் வழங்கப்பட்ட நாள் முதலாக 14 நாட்களுக்குள்ளும் 14 நாட்களுக்கு முன்பாகவும் தெரிவு செய்யப்பட்ட கேள்வியைச் சமரப்பித்தவரால் மின்சாரப் பொறியியலாளரின் அங்கீகாரத்திற்காக Working Drawings சமரப்பிக்கபட வேண்டுமாயின், அத்தேவை பூர்த்தி செய்யப்படவில்லை. | உரிய Working Drawing Melco நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஆலோசகரான திரு.சிரிவர்தன அவர்களால் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த Drawing தேவையான தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காகவும் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பிரதிகளை கண்காணிக்க முடியும். |
| | (v) | தொழில்நுட்ப மாதிரிப் படிவங்களில் குறிப்பிட்டவாறு மின்தூக்கிப் பொருட்கள் (Lift Materials) குறித்த உற்பத்தி நிறுவனத்தினது தொழிற்சாலையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் பெயர் குறிப்பிடப்படும் பரிசோதகர்கள் இருவரிடம் இயந்திரத்தின் துணைப்பாகங்களது நிலைமையைப் பரிசீலிப்பதற்கான (Quality Assuaring) தொழிற்சாலைப் பரிசீலனை விஜயங்கள் (Factory Inspection) ஒப்படைக்கப்பட வேண்டுமாயினும், மின்தூக்கிப் பொருட்கள் (Lift Materials) வைத்தியசாலைக்குக் கிடைக்கப் பெற்று 9 மாதங்களின் பின்னரே அந்த விஜயம் எதிர்பாக்கப்படும் நோக்கம் நிறைவேறவில்லை. | Melco நிறுவனத்தினால் தொழிற்சாலைப் பரீட்சிப்பு சுற்றுலா தொடர்பிலான திட்ட நடவடிக்கைகள் தாமதமாக பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் தொழிற்சாலைப் பரீட்சிப்பின் போது மின் உயர்த்தியின் பாகங்கள் உற்பத்தி செயன்முறை மற்றும் ஒவ்வொரு பாகத்தினதும் தர நிலை பரீட்சிப்பு செயன்முறை மற்றும் இயந்திரங்களை இயக்குதல் போன்றவற்றை பரீட்சிப்புக்கு உட்படுத்துவதுடன் அது தொடர்பில் சிறந்த அறிவை பெற்றுக் கொள்ள இயலுமாகவும் காணப்பட்டது.<br>இந்த தர நிலை பரீட்சிப்பில் Melco நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் மற்றும் வைத்தியசாலையினால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் கம்பனியின் ஆலோசகரான திரு.சிரிவர்தன அவர்கள் மற்றும் பராமரிப்பு பொறியியலாளர் அவர்களும் பங்கேற்றிருந்தனர்.<br>அதுபோல் தொழிற்சலையில் உற்பத்தி செய்யப்பட்ட சகல மின் உற்பத்திகள் தொடர்பிலும் மேற்குறிப்பிட்ட பரீட்சிப்பு செயன்முறை மேற்கொள்ளப்படுவதுடன் வைத்தியசாலைக்கு விநியோகிக்கப்பட்ட மின் உயர்த்திப் பாகங்கள் பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருந்தன<br>தொழிற்சாலைப் பரீட்சிப்பினூடாக மின் உயர்த்தி தொடர்பில் மேற்குறிப்பிட்ட வகையிலான அறிவைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகக் காணப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | (vi) | கேள்வியைச் சமரப்பித்தவா் இணங்கியவாறு பொருட்கொள்வனவுக் கட்டளை வழங்கிய 2016 ஆகஸ்ட் 08 தொடக்கம் 8 மாதங்கள் நிறைவடையும் 2017 ஏப்பிரல் 08 ஆந் திகதியளவில் 05 மின்தூக்கிகளும் வழங்கப்பட்டு பொருத்தப்பட்டிருக்க வேண்டுமாயினும், 03 மின்தூக்கிகள் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் நிறுவப்பட்டு ஒப்படைப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பிரதான கட்டுப்பாட்டு அறை (Main Control Room) மற்றும் Lift Cabin என்பவற்றுக்கிடையே தொடர்பாடல் வசதிகள் (Interphone System) வசதி வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, கேள்விகளுக்கான நிபந்தனைகளுள் தாமதக் கட்டணம் தொடர்பான நிபந்தனைகள் உள்ளடக்கபடாததால் 01 முதல் 04 ஆண்டு கால தாமதக் கட்டணம் அறவிடப்பட முடியவில்லை. | வைத்தியசாலையின் அன்றாட நடவடிக்கைகள் பொருட்களை மேலேயும் கீழேயும் கொண்டு செல்லுதல், அதிதிகளை மேலேயும் கீழேயும் கொண்டு செல்லுதல், மற்றும் நோயாளர் பராமரிப்பு சேவையை சரியான முறையில் கொண்டு செல்வதற்காக வைத்தியசாலையில் 3 மின் உயர்த்திகளை இயக்கிச் செல்லுதல் அத்தியாவசியமானது என்பதை வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெளிவாக அறிந்திருந்தனர். விலைமனுக் கோருபவரால் இணக்கம் தெரிவித்திருந்ததற்கு அமைய புதிய மின் உயர்த்திகளை மாற்றும் செயற்பாடுகள் பலகட்டடங்களில் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. முதலில் 1, 2 ஆம் மின் உயர்த்திகளைப் போன்று ஏனைய 3 மின் உயர்த்திகளும் 2 சந்தர்ப்பங்களில் மாற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதால் புதிய 5 மின் உற்பத்திகளையும் பொருத்துவதற்கு இந்தக் கால எல்லை எடுத்துக் கொள்ளப்பட்டது இந்தச் செயற்பாடுகளினால் வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பு சேவைக்குப் பாதிப்புக்கள் ஏற்படாதவாறு வழியமைத்துக் கொள்ளக் கூடியதாகக் காணப்பட்டமை வைத்தியசாலைக்கு ஒரு சாதகமான நிலையாகும்.<br>பழைய மின் உயர்த்தி இலக்கம் 3 மற்றும் 4 ஐ அகற்றி அவ்விடத்தில் புதிய மின் உயர்த்தி இலக்கம் 3 மற்றும் 4 ஐ நிறுவி சரியான இயங்கு நிலைக்கு கொண்டு வந்து 2018.01.09 ஆம் திகதி பாவனைக்காக வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டன.<br>(இணைப்பு 6.1.1 (அ) (iv, vi)<br>மேற்குறிப்பிடப்பட்ட முறையில் 5 ஆம் இலக்க மின் உயர்த்தியை சரியான இயங்கு நிலைக்கு கொண்டு வந்து 2017.07.25 ஆம் திகதி பாவனைக்காக வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டது. பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன. / Electronic Touchless Human Door Sencer (full height) 5 மின் உற்பத்திகளுக்கு சரியான முறையில் பொருத்தப்பட்டுள்ளன. செயற்பாட்டு ரீதியான கண்காணிப்பினூடாக உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும் Main control room மற்றும் lift cabin ஆகியவற்றுக்கிடையிலானதொடர்பாடலை (Interphone system) மேற்கொள்ளுதல் தற்போது இடம்பெற்று வருவதுடன் இந்தத் தாமதம் தொடர்பில் எழுத்து மூலமாக ETA Melco கம்பனிக்கு அறியப்படுத்தி இருப்பதுடன் இறுதியாக 2018.08.13 ஆம் திகதி எழுத்து மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டது. |
| | (vii) | கேள்விகளுடன் தொடர்புடைய பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட 14 ஆம் இலக்க வடிவமைப்பின் பிரகாரம் மின்தூக்கி Cabin ஒன்றினது அகலம் 1,500 மில்லி மீட்டர் ஆக இருக்க வேண்டுமாயினும் , வழங்கப்பட்ட 1, 2, 3, 4 ஆம் இலக்க மின்தூக்கி Cabin களது அகலம் 1,200 மில்லி மீட்டர் மாத்திரமே ஆகவிருந்ததுடன் 5 ஆம் இலக்க மின்தூக்கி Cabin 1,400 மில்லி மீட்டர் அகலம் உடையதாக மாத்திரம் இருந்தமை நேரடிப்பரிசோதனையின் போது | மின் உயர்த்திக்கென உலகில் காணப்படும் பெறுமதி மிக்க சிறந்த அங்கீகாரம் பெற்ற வேலை விபரங்கள் ஆகிய (British Standend) BS- 5655 மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பயன்படுத்தப்படும் EN 81 (89 ஆம் பக்கம் முதல்) ஐக் கொண்டு இந்த விலை மனுக் கோரல் படிவங்கள் தயார் செய்யப்பட்டிருப்பதனால் அதிலுள்ள கட்டில் மின் உயர்த்திகளுக்கென நவீன |

| | | | |
|---|---|---|---|
| | | அவதானிக்கப்பட்டது. உள்ளவாறான இந்த அளவைகளைக் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தும் சான்றுறுதியை வழங்குவதற்கு வைத்தியசாலைப் பராமரிப்புப் பொறியலாளர் புறக்கணித்திருந்தார். | தொழினுட்ப இயந்திரங்களில் (Latest Technology incorporated with Microprocessor controller and inverter power drive with feedback Technology) க்கு ஏற்ப எதிர் கொண்ட(Counter Weight) மின் உயர்த்தி இயந்திரத்தின் ஒரு பக்கத்தில் மேலாகவும் கீழாகவும் இயங்குதல் வேண்டும்.<br><br>இருப்பினும் 32 வருடங்களுக்கு முன்னர் உற்பத்தி செய்யப்பட்ட பழைய மின் உற்பத்திகளின் எதிர் எடை அலகு மின் உயர்த்தி இயந்திரத்தின் பின்பகுதியில் மேலும் கீழுமாகி இயங்குவதுடன் மின் உயர்த்தி அமைந்திருந்த அகழிப்பகுதி மற்றும் இயந்திர அறையும் மிகவும் பழைமை வாய்ந்த தொழிநுட்பத்திற்கு அமைவாக தயார் செய்யப்பட்டிருப்பதுடன் தற்போது உலகில் எந்த ஒரு நாட்டிலும் இந்த உற்பத்தி செயன்முறை பாவனையில் இல்லை.<br><br>Tender வேலை விபரங்கள் தயார் செய்யும் போது பழைமை வாய்ந்த மின் உற்பத்தி இயந்திரங்களின் தரத்தை பேணிச் செல்வதற்காக உயர்ந்தபட்ச முயற்சியை எடுப்பதன் பொருட்டு பழைமை வாய்ந்த மின் உயர்த்தி இயந்திரங்களின் அகலம் 1500mm மற்றும் நீளம் 2300 mm ஆக குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>ஆனால் BS-5655க் கொண்ட புதிய தொழினுட்பத்திற்கு அமைவாக முன்னைய அளவிலான இயந்திரம் ஒன்றைப் பயன்படுத்துவதற்கு மின் உயர்த்தி இயந்திரத்தின் அகழி போதுமானதாக இல்லாமையால் புதியமின் உயர்த்தி இயந்திரங்களின் அளவில் மின் உயர்த்தி இயந்திரங்களின் இலக்கம் 1,2,3,4 ன் அகலமானது 1200mm ஆகவும் மின் உயர்த்தி இயந்திர இலக்கம் 5ன் அகழியானது ஓரளவு விசாலமாகக் காணப்படுவதனால் அதற்கு 1400mm அகலமுடைய இயந்திரம் ஒன்றை ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. (மேற்படி பழைமை வாய்ந்த மின் உயர்த்தி இயந்திரங்களின் அகழிகளின் சிவில் நிலைமையை மாற்றுவது பொருத்தமற்றதென பொறியியலாளர்களின் தீர்மானமாகக் காணப்பட்டது).<br><br>அதேபோல் பொருத்தப்பட்டிருக்கும் இயந்திரங்களின் நீளம் ஏற்கனவே காணப்பட்டவைகளையும் விட 220mm நீளத்தில் அதிகமாகும். எவ்வாறாயினும் அங்கீகரிக்கப்பட்ட BS-565 வேலை விபரங்களுக்கு ஏற்ப அந்த இயந்திரங்களின் அளவுகள் வைத்தியசாலைகளின் பாவனைக்கு அங்கீகரிக்கப்பட்ட அளவுகள் என்பது போலவே உப அளவுகளைக் கொண்ட வேலை விபரங்களுக்கு ஏற்ப மின் உயர்த்தி இயந்திரத்தை நிறுவுதலானது |

| | | | |
|---|---|---|---|
| | | | சட்டபூர்வமானதாக இல்லாதமையால் இதற்காக உள்ள மின் உயர்த்தி இயந்திரங்கள் இந்த இடங்களுக்குப் பொருத்தமானவை என மேலும் குறிப்பிட்டு கூற முடியும்.<br><br>வைத்தியசாலையின் பராமரிப்பு பொறியியலாளரினால் மின் உயர்த்தி இயந்திரத்தின் கணக்குகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக, மின்சார வேலைகள் பிரதானியை ஈடுபடுத்தியிருப்பதுடன் வருகை தந்த கணக்காய்வு அதிகாரிகள் மற்றும் மின்சார வேலைக்கான பிரதானியுடன் இணைந்து மின் உயர்த்தியின் கணக்குகளைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. |
| | (viii) | வழங்குநர் 2 ஆண்டுகால கட்டணமில்லாத பராமரிப்புச் சேவையை வழங்குவதற்கு இணங்கியபோதும், இந்த இயந்திரங்களை நிறுவியதன் பின்னர் பல சந்தர்ப்பங்களில் இவை தொழிற்படாது போனமையால் வழங்குநரது சேவை முறையாக அமையவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. | ETA & MELCO (PVT) LTD நிறுவனத்தினால் மின் உயர்த்தி இயந்திரத்தை நிறுவியதன் பின்னர் 2 வருடகாலம் கட்டணமின்றிய பராமரிப்பு ஒப்பந்தத்தின் கீழ் மாதாந்தம் பராமரிப்பு சேவை நடவடிக்கைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது தொடர்பான அறிக்கைகள் எம்மிடம் உள்ளன. இதற்கு மேலதிகமாக ஏற்படும் மின் உயர்த்தி இயந்திரங்களின் இயக்கமின்மை. (மின் உயர்த்தி இயந்திரங்கள் 5 இலும்) அந்த கம்பனிக்கு வாய்மொழி மூலமாக அந்த சந்தர்ப்பத்திலேயே அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் 10 log புத்தகங்களில் பதிவுகளும் இடப்பட்டுள்ளன. இயங்கு நிலையில் இல்லாமல் இருப்பது தொடர்பில் கண்காணிப்பதற்காக மிகவும் குறுகிய காலத்திற்குள் நிறுவனத்தினால் வருகை தந்து சிக்கல்களை சீர் செய்து தருவது போலவே சிலசந்தர்ப்பங்களில் தாமதமாகி வந்து சிக்கல்களை சீர் செய்து தந்த சந்தர்ப்பங்களும் உள்ளன. ஆனால் இந்த சீர் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மின்னியல் நிபுணர்களினால் 10 log புத்தகங்களில் பதிவுகள் இடம்பெறவில்லை.<br><br>இயங்கு நிலை அற்றிருப்பதனை சீர் செய்தலைப் பெறும் படையாக எடுத்துப் பார்க்கும் போது Melco நிறுவனம் பங்கேற்று அதனை மேற்கொண்டிருப்பதுடன் நீண்டகால (24 மணித்தியாலங்கள்) மின் உயர்த்தி இயந்திர செயலற்ற நிலை ஏற்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமைகளின் கீழ் Melco நிறுவனத்தின் சேவை நடவடிக்கைகள் தொடர்பில் திருப்தி அடையக் கூடிய நிலை காணப்படுகின்றது. |
| | (ஆ) | மீளாய்வாண்டின்போது ரூபா 58,525,000 செலவில் Digital Mammography இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு. | |

| | | | |
|---|---|---|---|
| | (i) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.3.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், கேள்வியை கோரும்போது, தெரிவு செய்யப்படுவர் நேரடியாகத் தகுதி உடையவர் என்பதை உறுதி செய்யும் நோக்கும் தகைமையும் தொடர்பான தேவையை உள்ளடக்கிய கேள்வியைத் தயாரிப்பதற்கு வசதியாக தெரிவு செய்யப்பட்டவருக்கு அவசியப்படும் உசிதமான மற்றும் குறித்த ஆரம்பத் தகவல்கள் உள்ளடங்குமாறு கேள்விகளுக்கான கோருதல் பிரசித்தப்படுத்தப்பட வேண்டும் எவ்வாறாயினும் இந்த இயந்திரத்தை வழங்குதல் நிறுவுதல் பராமரித்தல் போன்ற சகல பணிகளுக்கும் பதிலாக இயந்திரத்தை வழங்குவது மாத்திரமே கேள்வியைக் கோரப்படுகையில் பிரசித்தப்பட்டிருந்தது. | விலைமனுக் கோருவதற்கென செய்திப் பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுதலானது உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டது. இங்கு குறிப்பட்டுள்ளதற்கு அமைவாக அந்த உபகரணத்தை வழங்குவது சம்பந்தமாக மட்டும் செய்திப் பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இந்த விலைமனுக் கோரலுக்காக 6 நிறுவனங்களிடமிருந்து விலைமனுக் கோரல் விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் போதுமான அளவு போட்டி நிலை இது தொடர்பில் இருந்துள்ளது. மேலும் இத்தகைய இயந்திரங்கள் உற்பத்தி செய்யப்படுவது மிகவும் வரையறுக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் குழுவினால் மட்டுமே. அந்த அனைத்து நிறுவனங்களும் பிரதிநிதித்துவம் வழங்கியிருக்கின்றன.<br><br>மேலும், விளம்பரத்தில் உரிய விலைமனுக் கோரல் இலவசமாக பரீட்சித்துப் பார்க்க இயலுமென குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப இதற்கான விருப்பத்தை வெளியிடும் எந்தவொரு நிறுவனத்திற்கும் வாசித்துப் பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றுள்ளது. எனவே இந்தக் கூற்றை ஏற்றுக் கொள்ள இயலாது. |
| | (ii) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.6.ம் வழிகாட்டலின் பிரகாரம் கேள்விகளைத் திறக்கும் போதான நடவடிக்கைகள் குறித்த மாதிரிப் படிவத்தில் குறித்து கொள்ளப்பட வேண்டுமாயினும் அதற்கெனக் குறிப்பிடப்பட்ட மாதிரிப் படிவம் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் பேணப்பட்ட கேள்விகளை திறக்கும் போது பயன்படுத்தப்பட்ட அறிக்கையில் கேள்விகளைச் சமர்பித்தவரது அல்லது பிரதிநிதியினது கையொப்பம் பெறப்பட்டிருக்கவுமில்லை. | விலைமனுக் கோரல் திறந்து வைத்தவை மேற்கொள்ளும் போது விலைமனுக் கோரலுக்காக பங்குபற்றியிருக்கும் பிரதிநிதிகளின் வரவினை உறுதிப்படுத்திக் கொண்டு அவர்களுடைய கையொப்பத்துடன் கூடிய பெற்றுக் கொள்ளப்பட்ட படிவங்கள் தனியான கோவை ஒன்றின் மூலம் பேணப்பட்டு வருகின்றது. இது கணக்காய்வின் போது கேட்கப்பட்டிருந்தால் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருந்திருந்தது.<br><br>வைத்தியசாலையினால் வாரத்திற்கு ஒரு முறை விலை மனுக்கோரல் திறந்து பார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தினத்தில் சுமார் 10 ற்கும் மேற்பட்ட விலை மனுக்கோரல்கள் திறந்து பார்க்கப்படுகின்றன. இதன் போது ஒவ்வொரு விலை மனுக்கோரலின் போதும் வரவினைப் பதிவுசெய்யும் ஆவணத்தில் கையொப்பத்தினைப் பெற்றுக் கொள்வது கடினமான காரியம் என்பதால் சக விலை மனுக்கோரலிலும் பங்குபற்றிய பிரதிநிதிகளின் ஒரு கையொப்பப் பட்டியல் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. அது தனியான ஒரு கோவையின் மூலம் பேணப்பட்டுவருகின்றது.<br>அதற்கேற்ப கொள்முதல் செயற்பாடுகள் கொள்முதல் சிபாரிசுகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டது. |
| | (iii) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.11.1 ஆம் பந்தியின் பிரகாரம், தொழில்நுட்ப மாதிரி வடிவத்தின் பிரதான | தொழினுட்ப குறிப்புகளில் ஒத்திசைவான தன்மையை மதிப்பீடு செய்ததன் பின்னர் அறிக்கையை தயார் செய்யும் போது |

| | | | |
|---|---|---|---|
| | | அம்சங்களுக்கு இணைவாக கேள்வியைச் சமர்ப்பிக்கும் சகலரதும் அட்டவணை ஒன்றை தொழல்நுட்ப மதிப்பாய்வுக் குழு தயாரித்து அதனைப் பொருட் கொள்வனவுக் குழுவிற்குச் சமா்ப்பிக்க வேண்டுமாயினும் அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பல்வேறு முறைகளைப் பயன்படுத்தப்படுவதுடன் அட்டவணை முறையினைப் பயன்படுத்துமாறு வைத்தியசாலை கொள்முதல் குழுவினால் 2017 ஆம் ஆண்டுமுதல் அறிவூட்டப்பட்டுள்ளது. அதற்கேற்ப அட்டவணை முறையைப் பயன்படுத்தும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்கு முன்னர் எமது நிறுவனத்தில் காணப்பட்ட பொதுவான முறைக்கு அமைவாகி இந்த விலை மனுக்கோரல் குறிப்புகளில் மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட மதிப்பீட்டின் பின்னர் சகல குறிப்புகளும் பரீட்சிக்கப்பட்டுள்ளன. |
| | (iv) | கேள்வி கோரலின்போது தெரிவு செய்யப்பட்டவர் சமரப்பித்த கேள்வியில் குறித்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சியும் உள்ளடங்கப்பட்டிருந்த போதும், 2017 பெப்ரவரி 10 ஆந் திகதி இயந்திரம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதியளவிலும் அப்பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் ஒப்பந்தகாரருக்கு மொத்தத் தொகையும் வழங்கப்பட்டிருந்தது. | தொழினுட்ப மதிப்பீட்டு செயற்பாடுகளின் போது கணக்கிடப்படும் மொத்த செலவீனத்திற்கு உபகரணத்தின் பெறுமதி உட்பட ஏனைய சகல செலவுகளும் உள்ளடக்கப்படுதல் வேண்டும் விஷேட பயிற்சிகள் கட்டாயமான தொழினுட்ப குறிப்புகளாகக் காணப்படுவதனால் அதற்காக செலவிடப்படும் செலவினத்தை கருத்தில் கொள்ளாமல் இருப்பதை ஒரு போதும் செய்யலாகாது. அதற்கேற்ப அந்த செலவினை இங்கு பெறுமதியுடன் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| | (v) | இந்த இயந்திரத்தின் மூலம் நாளொன்றிற்கு 20 மார்பகப் புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட முடியுமெனக் கணக்காய்வில் தெரியவந்தமையால் 2017 யூன் 23 முதல் 2018 பெப்ரவரி 28 வரையான 8 மாதங்களின் போது மாதாந்தம் 20 வேலை நாட்களாகக் கருதப்பட்டு அவ்வாறு கணிப்பீடு மேற்கொள்ளப்படுமாயின் ஏறக்குறைய 3,200 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். எவ்வாறியினும் அக்காலப்பகுதியின்போது 449 பரிசோதனைகள் மாத்திரமே நடைபெற்றதால் இயந்திரத்தின் பயன்பாடு அதன் ஆற்றலின் ஏறக்குறைய 14 சதவீதமாகவே இருந்தது. | அதன் போது எங்களால் வழங்கப்பட்டிருக்கும் மாதாந்த தரவுகள் சரியானவை ஆகும். அதே போல் நாள் ஒன்றுக்கு செய்யக் கூடிய எண்ணிக்கையும் சரியானவையே. எம்மால் இந்தப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட போது எவ்வித சத்தியபிரமான ஆவணங்களும் இல்லாமல் காணப்பட்டதுடன் நோயாளர்களுக்கு சரியான மற்றும் அவர்கள் கேட்கும் தினங்களிலும் செய்து கொடுக்கப்படும். எம்மால் இந்தப் பரீட்சிப்பு நாள் ஒன்றுக்கு சுமார் 20 வரை செய்ய இயலுமாக இருக்கின்ற போதிலும் நாளொன்றுக்கு கிடைக்கப்பெறும் சகல பரீட்சிப்புக்கள் எம்மால் செய்யப்பட்டாலும் நாள் ஒன்றுக்கு 20 ஐ செய்வதற்காக இந்த பரீட்சிப்புக்கான கேள்விகள் இல்லாமல் இருப்பதால் 20 செய்யப்படுவதில்லை என்பதை குறிப்பிடுகின்றேன். |
| | (இ) | மீளாய்வாண்டின்போது ரூபா 21,450,000 செலவில் இரத்தப் புற்று நோய் வகைகளை இணங்காணக் கூடிய Flow Cytometer இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும். | |
| | (i) | 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்படுவதற்கு வைத்திய உபகரண நிரலில் இதற்கான மதீப்பீட்டுத் தொகை ரூபா 8 மில்லியன் ஆகவிருந்த போதும் உள்ளவாறு செலவிடப்பட்டது ரூபா 21.45 மில்லியன் ஆகையால் மதீப்பீடு 168 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | இந்த உபகரணம் 2016 ஆம் ஆண்டின் நிதித்கூற்றின் கீழ் விலைக்கு கொள்வனவு செய்ய விண்ணப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஆண்டின் ஒதுக்கீட்டின் அடிப்படையில் விலைக்கு கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு ஏற்ப அந்த உபகரணம் சுமார் 8. மில்லியன் |

| | | | |
|---|---|---|---|
| | | | ரூபா பெறுமதியாகும் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இத்தகைய உபகரணம் இதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அண்ணளவான மதிப்பீட்டு பெறுமதியின் மீது இந்தத் தொகை ஒதுக்கப்பட்டது. ஆனால் விலை மனுக்கோரப்பட்டதன் பின்னர் தெரிவு செய்யப்பட்ட உபகரணம் 21.45 மில்லியன் ரூபா பெறுமதியாகக் காணப்பட்டிருந்தது. இது மதிப்பீடு செய்யப்பட்டிருந்த தொகையை விட சுமார் 168% மேலதிகப் பெறுமதியைக் கொண்டுள்ளது.<br>இத்தகைய உபகரணத்திற்கு 100% சரியான மதிப்பீட்டை செய்து கொள்வதற்கு இயலாமல் போனதாலும் அண்ணளவான மதிப்பீட்டின் அடிப்படையில் 'விலைக்குக் கொள்வனவு செய்தலை மேற்கொண்டதன் அடிப்படையிலும் இத்தகைய வித்தியாசங்கள் ஏற்படக்கூடியதாக அமைந்தது. இத்தகைய நிகழ்வுகளைக் குறைத்துக் கொள்ள உயர்ந்த பட்ச முயற்சிகள் எடுக்கப்படும். |
| | (ii) | இயந்திரத்தின் மாதிரி வடிவத்திற்கான பொது நிபந்தனை (1) க்கமைய கேள்வி கோரலின்போது தெரிவு செய்யப்பட்டவர் வழங்கும் இயந்திரத்தின் வகை அல்லது மாதிரிக்குரிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் சமரப்பிக்கப்பட வேண்டுமாயினும் அச்சான்றிதழ் சமரப்பிக்கப்படாமை தொடர்பாகக் கருத்தில் கொள்ளாது ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | CDDA (NMRA) பதிவுச் சான்றிதழின் இலக்கத்துடன் பதிவை புதுப்பித்துக் கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்ட படிவத்தின் ஒரு பிரதி விலை மனுக் கோரலுடன் வழங்கப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு சிபாரிசுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும் தற்போது NMRA சான்றிதழின் பிரதி ஒன்றை பெற்றுக் கொள்ளுதல் கட்டாயமாகக் காணப்படுவதுடன் அது மதிப்பீட்டின் பிரதான காரணியாக கருத்தில் கொண்டு சிபாரிசு வழங்குதல் மேற்கொள்ளப்படும். |
| | (iii) | கேள்வி கோரலின் போது முன் வந்த இருவரும் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட முக்கிய தேவைகளுக்கேற்ப இணங்கி வரும் இயந்திரத்திக்கான கேள்விகளை சமர்ப்பித்ததுடன் இதற்கு முன்னர் வழங்கப்பட்ட இயந்திரம் செயற்படாது போனமையைக் குறிப்பிட்டு குறைந்த விலையைச் சமர்ப்பித்த கேள்வி நிராகரிக்கப்பட்டிருந்தது . எனினும், அவ்வாறு அது செயற்படாது போகவில்லை என கணக்காய்வில் புலனாகியது. அவ்வாறே, இயந்திரத்தின் கிரயத்தையும் பராமரிப்பு கிரயத்தையும் ரூபா 10,250,646 அதிகரித்து அதிக விலையைச் சமர்பித்தவரது முன்னைய குற்றச்சாட்டுகளை ஆராயாது அவருக்கே ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | இந்த விலை மனுக் கோரலை வழங்குவதற்காக தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுகள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. அதன் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரண்டு விலைமனுக் கோரல்களிலும் உரிய குறிப்புகள் வழங்கப்பட்டிருந்து என்பதை உறுதிப்படுத்தியிருந்த போதிலும் குறைந்த விலைகளை சமர்ப்பித்திருந்த விலைமனுக்கோருபவரின் சேவைகள் தொடர்பில் திருப்தியடைய முடியாது என்ற காரணி பிரதான காரணியாக கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. இந்த குழுவில் End user-உம் உள்ளடங்கியிருப்பதுடன் அந்த விஷேட வைத்திய நிபுணர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். மேலும் குறைந்த விலைகளைச் சமர்ப்பித்திருந்த விலைமனுக்கோருபவரின் இத்தகைய உபகரணங்களை இலங்கையில் விநியோகித்திருத்திருக்காமை மற்றும் சிபாரிசு செய்யப்பட்ட விலைமனுக்கோருபவர் அத்தகைய உபரணங்களை இலங்கையில்:- விநியோகித்திருக்கின்றமை மற்றும் அந்த உபகரணங்களின் வெற்றிகரமான செயற்பாடுகள் போன்ற காரணிகளின் மீது |

| | | | |
|---|---|---|---|
| | | | இந்த சிபாரிசு வழங்கப்பட்டுள்ளது. அது கொள்முதல் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் போது நிதிக் காரணி பிரதான காரணியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கொள்முதல் குழுவினால் சேவைக் கட்டணங்கள் மற்றும் பராமரிப்பு செலவு 10,942 மில்லியன் ரூபா முதல் 7,112 மில்லியன் ரூபா வரை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br>அதற்கேற்ப இந்த கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுக்கோருபவரின் முன்னைய குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் கண்டறிந்து கொள்ளாமல் அவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. என கூறுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது. தொழினுட்பக் குழுவினால் இந்த வழக்குநர் இந்த உபகரணத்தை வழங்கியிருக்கும் வைத்தியசாலைகள் மற்றும் அவர்களது சேவைகள் பற்றி தனது சிபாரிசுகளில் குறிபபிடப்பட்டுள்ளது. |
| | (iv) | இந்த இயந்திரத்தின் மூலம் நோயைத் தீர்மானிக்கும் இரத்தப் புற்று நோய் வகை பெருமளவு இலங்கையில் அறிவிக்கபடாதவையாகுமெனக் கணக்காய்வில் புலனாகியதுடன், இயந்திரம் நிறுவப்பட்டதன் பின்னர் 2017 மார்ச் மாதம் 01 முதல் 2018 ஏப்ரல் 30 வரையான 14 மாதங்களுக்குள் 32 பரிசோதனைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சில மாதங்களில் பரிசோதகைகள் எதுவும் நடைபெற்றிருக்கவுமில்லை. | வைத்தியசாலையில் நிறுவியிருக்கும் இந்தப் புற்று நோய்களை நிர்ணயம் செய்யும் இயந்திரத்தினூடாக மிகவும் சரியாக உடனடியாக இந்தப் புற்று நோயைக் கண்டுகொள்ளக் கூடியதுடன் , அதனூடாக மிகவும் பாரதூரமான நிலைக்கு உள்ளாகும் நோயாளர்களுக்கு உடனடி சிகிச்சை வழங்குவதன் மூலம் இரத்த புற்று நோயால் பீடிக்கப்பட்டிருக்கும் நோயாளர்களை காப்பாற்றும் இயலுமையை விஷேட வைத்திய நிபுணர்களுக்குப் பெற்றுத்தருகிறது. இந்த இயந்திரம் தற்போது இந்த வகையைச் சேர்ந்தது. அதி நவீன (8 Colour dye) இயந்திரமாகக் காணப்படுவதுடன் அதன் பாவனையைப் போலவே பெறுபேறுகளும் அதற்கு முன்னர் இருந்த இயந்திரங்களின் வகைகளை விட அதிக நவீனமான சுபாவத்தைக் கொண்டுள்ளது.<br>இந்த இயந்திரத்தினூடாக லியூக்கேமியா(Leukaemia), மல்டிபல் மய்லோமா (Multiple myeloa), லிம்கோமா(Lymphoma), போன்ற இரத்தப் புற்று நோய் வகைகளை நிர்ணயம் செய்து கொள்ளக் கூடியதாகக் காணப்படுவதுடன் அதற்காக நோயாளர்களின் என்பு மச்சை (Bone marrow) மற்றும் இரத்த மாதிரி, (Peripheral Blood) பாவிக்கப்படுகிறது.<br>இது ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் நவீன மயப்படுத்தப்பட்ட பகுதியில் உரிய வெப்பநிலை மட்டத்தில் முறையாக பாதுகாப்பான வகையில் பாவிக்கப்படுகின்றது. என்பதனை ஸ்ரீ ஜயவர்தனபுர பொதுவைத்தியசாலையின் இரசாயன ஆய்வு கூடத்திற்குள் வருகின்ற எந்த ஒரு நபராலும் விளங்கிக்கொள்ள முடியும். |

| | | | |
|---|---|---|---|
| | | | இது ஸ்தாபிக்கப்பட்டு சுமார் ஒரு வருட காலப் பகுதிக்குள் 22 அளவிலான நோய்கள் தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இயலுமை காணப்படுகின்றமை, எமது வைத்தியசாலையின் குருதியியல் பிரிவு பெற்றுக் கொண்ட ஒரு வெற்றியாகக் காணப்படுவதுடன் எதிர்காலத்தில் மேலும் அது போன்ற ஏராளமான சந்தர்ப்பங்கள் எம்மை நோக்கி வரும் என்பதற்கு அது ஒரு சிறந்த சந்தர்ப்பமாக அமைந்திருக்கிறது என்பதும் அதனூடாக உறுதியாகின்றது. அந்த நோயாளர்களுக்கு மத்தியில் பெரும் பகுதியினர் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் நோயாளர்களாகக் காணப்படுவதுடன் ஏனைய தனியார் வைத்தியசாலைகளில் இருந்தும் வருகை தரும் நோயாளிகளுக்கு மேற்படி பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.<br>இந்த இயந்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பரிசோதனை அதிக விலை கூடியதாகக் காணப்படுவதனால் அத்தியவசியமான நோயாளர்களுக்கு மட்டும் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. |
| | (v) | இந்த இயந்திரத்தின் பாவனைக்கு பயன்படுத்தப்படும் ரூபா 4,608,158 கிரயமுடைய 42 Antibody Vials குறித்த பிரிவைச் சார்ந்ததென்றும் அதன் மூலம் 3,390 பரிசோதனைகள் மேற்கொள்ளப்படலாம் எனவும் கணக்காய்வில் தெரியவந்ததுடன் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளது எண்ணிக்கை பிரகாரம் இயந்திரம் குறைவாகப் பயன்படுத்தபட்டிருந்ததும் அவதானிக்கப்பட்டது. அவற்றுள் ரூபா 4,319,196 கிரயமுடைய 38 Vials 2018 யூன் 30 ஆந் திகதியளவிலும் காலாவதியாகியிருந்தன. | வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இரத்தப் புற்று நோய் வகைகளை நிர்ணயம் செய்யும் இயந்திரத்தின் மூலம் மிகவும் துல்லியமாக, மிகவும் விரைவாக இரத்தப் புற்று நோய் இனங்காணுதலை மேற்கொள்ளக் கூடியதாக இருப்பதுடன், அதனூடாக மிகவும் பாரதூரமான நிலைமைகளுக்கு உள்ளாகும் நோயாளர்களுக்கு உடனடி சிகிச்சை வழங்குவதன் மூலம் இரத்தப்புற்று நோயால் பீடிக்கப்பட்டிருக்கும் நோயாளர்களை காப்பாற்றிக்கொள்ளும் இயலுமையை விஷேட வைத்திய நிபுணர்களுக்கு வழங்குகின்றது.<br>இந்த இயந்திரம் தற்போது இந்த வகையை கொண்ட அதி நவீன (8 Colour dye) இயந்திரமாகக் காணப்படுவதுடன் அதன் பயனைப் போலவே பெறுபேறுகளும் அதற்கு முன்னர் இருந்த இயந்திரங்களின் வகைகளை விட அதி நவீன சுபாவத்தைக் கொண்டுள்ளன.<br>இந்த இயந்திரத்தின் மூலம் லியுக்கேமியா (Leukaemia), மல்டிப்பல் மய்லோமா (Multiple myeloma), லிம்கோமா (Lympkoma) போன்ற இரத்தப் புற்று நோய் வகைகளை நிர்ணயம் செய்து கொள்ளக் கூடியதாக காணப்படுவதுடன் அதற்கான நோயாளர்களின் என்பு மச்சை மற்றும் ரத்த மாதிரி பாவிக்கப்படுகின்றது.<br>இது ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலையில் நவீனமயப்படுத்தப்பட்ட பகுதியில் உரிய வெப்பநிலை மட்டத்தில் முறையாக பாதுகாப்பான வகையில் பாவிக்கப்படுகின்றது என்பதற்கான ஸ்ரீ |

| | | | |
|---|---|---|---|
| | | | ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலையின் இரசாயன ஆய்வு கூடத்திற்குள் வருகின்ற எந்தவொரு நபராலும் விளங்கிக் கொள்ள முடியும். இது ஸ்தாபிக்கப்பட்டு சுமார் ஒரு வருட காலப்பகுதியில் 22 அளவிலான நோய்கள் தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இயலுமை காணப்படுகின்றமை எமது வைத்தியசாலையின் குருதியியல் பிரிவு பெற்றுக்கொண்ட ஒரு வெற்றியாக காணப்படுவடுவதுடன் எதிர்காலத்தில் மேலும் இது போன்ற ஏராளமான சந்தர்ப்பங்கள் எம்மை நோக்கி வரும் என்பதற்கு அது ஒரு சிறந்த சந்தர்ப்பமாக அமைந்திருக்கின்றது என்பது அதனூடாக உறுதியாகின்றது. அந்த நோயாளர்களுக்கு மத்தியில் பெரும் பகுதியினர் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் நோயாளர்களாக காணப்படுவதுடன் ஏனைய தனியார் வைத்தியசாலைகளில் இருந்தும் வருகை தரும் நோயாளர்களுக்கு மேற்படி பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. |
| | (ஈ) | மீளாய்வாண்டின்போது வைத்தியசாலைக்கு தேவையான மீனை வழங்குவதற்கான ஒப்பந்த உடன்படிக்கை 2017 ஜனவரி 04 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஒப்பந்தப் பெறுமதி ரூபா 25,950,240 ஆகும் . பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| | (i) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.3.2 (ஆ) மற்றும் (இ) வழிகாட்டல்களின் பிரகாரம், கேள்விகளைச் சமர்ப்பித்தவர்களது முன்னைய தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான அழைப்பைத் தயாரித்தல் அவற்றை மீளாய்வு செய்தல், அங்கீகாரம் என்பவற்றுடன் மாதிரி வடிவத்தை உள்ளடக்கிய கேள்வி ஆவண வரைவுகளைத் தயாரித்தல் அவற்றை மீளாய்வு செய்து அங்கீகரித்தல் போன்றவற்றிற்குத் தொழினுட்பப் பகுப்பாய்வு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இதன்போது விலைமனுக்கோருபவரின் முன்னைய தகைமைகள் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படாமல் இருந்தமை பற்றி குறிப்பிடுதல் வேண்டும். ஆனால் விலைமனுக்கோருபவர் கோர முன்னர் விலைமனுக்கோரல் ஆவணக் குறிப்புகள் தயார் செய்வதற்கு தொழினுட்ப மதிப்பீட்டு குழு ஒன்றை நியமித்து அவர்களது சிபாரிசுகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.<br>அதற்கு ஏற்ப Q 746/16 ஆண்டு மீன்களை விநியோகம் செய்வதற்காக பேணப்படும் கோவைக்குள் 2016.09.27 ஆம் ஆண்டு குழுவை நியமிப்பதற்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள் மற்றும் 2016.10.04 ஆம் திகதி மதிப்பீட்டு குழுவை நியமிப்பதற்கு உரிய ஆவணங்கள் கோவைப்படுத்தப்பட்டுள்ளன. அதன் பின்னர் தொழினுட்ப மதிப்பீட்டு குழுவினால் விலை மனுக்கோரல் வரைவு உரிய படிவத்திற்கு அமைவாக சிபாரிசு செய்யப்பட்டது. |
| | (ii) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், பொருட் கொள்வனவு குழு மற்றும் தொழினுட்ப மதிப்பாய்வுக் குழு அறிக்கைகள் என்பன குறித்த மாதிரிப் படிவத்தன் பிரகாரம் தயாரிக்கப்படவில்லை. | இது ஏற்றுக்கொள்ளப்பட இயலாததுடன் சகல தொழினுட்பக்குழு அறிக்கைகள் மற்றும் கொள்முதல் குழு அறிக்கைகள் உரிய படிவத்திற்கு அமைவாக சிபாரிசு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | (iii) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.12 (அ) வழிகாட்டலின் பிரகாரம், பொருட் கொள்வனவு குழு மற்றும் தொழினுட்ப பகுப்பாய்வுக் குழு அங்கத்தவர்களது இரகசிய காப்பு மற்றும் நடுநிலைமை தொடர்பான கூற்றுக்கள் பெறப்படவில்லை. | இந்தக் கூற்றை பெற்றுக் கொண்டிருக்கவில்லை என்பது உண்மையாகும். வைத்தியசாலைக்குள் வருடாந்தம் விசால விலை மனுக் கோரல் ஒரு தொகை விலைப்பட்டியல் கோரப்படுகின்றன. இதற்காக தொழிநுட்ப மதிப்பிட்டுக் குழு அங்கத்தவர்களும் பாரிய அளவில் அடிக்கடி நியமிக்கப்படுகிறார்கள். இந்த அனைவரிடமும் இந்தக் கூற்றைப் பெற்றுக் கொள்வது கடினமான காரியமாக இருந்தபோதிலும் எதிர்காலத்தில் இதற்கு இசைவாக்கமடைந்து கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| | (iv) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1 (அ) வழிகாட்டலின் பிரகாரம், உணவு வழங்கல்களுக்கான சகல தேவைகளையும் உள்ளடக்கிய மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை. | சமைக்கப்படாத உணவுகளை வழங்கும் விலை மனுக்கோரல் நடைமுறை கோவை இதுவரை சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டதுடன் துண்டு மீன்களை விநியோகித்தல் வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்பட்டது.<br>அதற்கு ஏற்ப அமைச்சுக்காக வருடாந்தம் ஒரு மதிப்பீட்டை தயார் செய்து அமைச்சுக்கு வழங்கி இருந்ததுடன் ஏனைய உணவுப்பொருட்களுக்காக முறையான மதிப்பீடு ஒன்றை தயார் செய்யப்பட்டிருக்கவில்லை. ஆனால் எதிர்காலத்தில் சகல கொள்முதல்களும் வைத்தியசாலையினூடாக மேற்கொள்ளப்படுவதால் முறையாக மதிப்பீட்டை தயார் செய்து 2018/19 வருடத்திற்கான கொள்முதல் மேற்கொள்ளும் போது அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுப்பதற்கும் அவசியமான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| | (v) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.3.1 (அ) தொடக்கம் (ஈ) வரையான வழிகாட்டல்களின் பிரகாரம், லைத்தியசாலை சபை ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி கோரல் பதிவேடுகளைப் பயன்படுத்தியிராததுடன் அதற்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்ட கேள்விக்கான பதிவேடுகளின் யோக்கியதை தொடர்பாகத் தொழினுட்பப் பகுப்பாய்வுக் குழு மற்றும் பொருட் கொள்வனவுக் குழு என்பன பரிசோதனைகளை மேற்கொண்டு அங்கீகாரம் வழங்கியிருக்கவில்லை. | துண்டு மீன் விலைமனுக் கோரலுக்கு அங்கீகரிக்கப்பட்ட விலைமனுக் கோரும் ஆவணங்களுக்கு அமைவாக விலைமனுக் கோரலுக்கு உரியவாறாக ஆவணங்களை தயார் செய்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுகளுக்கு உட்பட்டு கொள்முதல் குழுவின் அனுமதியின் பின்னர் விநியோகிக்கப்பட்டுள்ளது.<br>இது தொடர்பில் சிற் சில குறைபாடுகள் காணப்படுமாயின் உங்களது அறிவுறுத்தல்களின் படி சீர் செய்து கொள்ள இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். |
| | (vi) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.3.2 ஆம் வழிகாட்டலுக்கமைய, கேள்விகளைக் கோரும்போது தெரிவு செய்யப்படும் | விலைமனுக்கோரல் அமைப்பில் விலைமனுக்கோருபவரின் தகைமைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பது |

| | | | |
|---|---|---|---|
| | | கேள்வியைச் சமர்ப்பித்தவருக்குரிய நேரடியாகத் தகைமையை உறுதி செய்யும் நோக்கங்கள், தகைமைகள் என்பன தொடர்பான தேவைகள் உள்ளடங்கிய கேள்விகளைத் தயாரிப்பதற்கு கேள்வியைச் சமர்ப்பிப்பவருக்கு அவசியப்படும் உசிதமான மற்றும் மூலத் தகவல்கள் உள்ளடங்குமாறான கேள்விகளைக் கோருவதற்கான அழைப்புத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | உண்மையாகும். தேவையான சகல தகவல்களும் விலை மனுக் கோரல் படிவத்தில் உள்ளடங்கி இருப்பதால் கட்டணங்களை அறவீடு செய்யாமல் விலை மனுக் கோரலை பரீட்சித்துப் பார்க்க முடியும் என அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு ஏற்ப அக்கறையுள்ள பகுதியினருக்கு செய்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இதன் போது விலைமனுக்கோரல் அழைப்பு குறுகியதாக்கும் வகையில் தயார் செய்து குறைந்த செலவில் அதனை நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| | (vii) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.10 ஆம் வழிகாட்டலுக்கமைய பின் தகைமைப் பரிசீலனைக்கான நோக்கம், கேள்வியைக் கோரும் ஆவணங்களில் தெளிவாகக் குறிப்பிட வேண்டுமாயினும் முன்னைய ஆண்டுகளின் போது சமமான வேலை வழங்கப்பட்டமை நிதிக் கூற்றுத் தரவுகள் வைத்தியசாலை வழங்கல் தொடர்பான முன்னைய செயலாற்றல் போன்ற நோக்கங்கள் கேள்விகளைக் கோரும் ஆவணங்களில் உள்ளடக்கப்படவில்லை. | விலைமனுக்கோரல் திறந்த பார்த்தலின் போது, தற்போது வைத்தியசாலை சில படிவங்களை மட்டும் வைத்துக் கொள்வதுடன் அந்த படிவங்கள் இந்த விலைமனுக்கோரல்களிலும் பாவிக்கப்பட்டுள்ளன. சகல படிவங்களும் விலை மனுக் கோரலை திறந்து பார்க்கும் போது அறிக்கையிடும் நடைமுறை சிக்கல்களின் காரணமாக பாவிக்காமல் இருந்த போதிலும் எதிர் காலத்தில் இந்தப் படிவங்களைப் பயன்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைக் குறிப்பிட வேண்டும். |
| | (உ) | சுகாதார, போசனை, தேசிய வைத்திய அமைச்சினது பொருட் கொள்வனவுக் குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 7,620,442 மாதாந்தப் பெறுமதியுடைய உணவு நிரலுக்குப் புறம்பாக, ரூபா 2,605,056 பெறுமதியான 82 மேலதிக உணவு வகைகளை கொள்வனவு செய்வதற்கு போட்டியுடனான கூறுவிலைகள் கோரப்படாது 2016 செப்டெம்பர் 27 ஆந் திகதி மீன் மற்றும் உலர் உணவுப் பொருட்களை வழங்கும் வழங்குநருக்கே வேறொரு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.10 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், ஒப்பந்தத்தின் வருடாந்தப் பெறுமதியில் 10 சதவீதத்திற்கு செயலாற்றல் பிணை முறி பெறப்படாததுடன், வழிகாட்டல் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தக்காரருடன் முறையான உடன்படிக்கையில் ஈடுபடவுமில்லை | வைத்தியசாலைக்கு சமைக்காத உணவுகளை வழங்கும் கொள்முதல் நடவடிக்கைகள் சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன்போது அமைச்சினால் விலை மனுக் கோருவதற்கு உரிய வகைப் பொருட்கள் பட்டியலை வைத்தியசாலைக்கு வழங்கி உரிய மதிப்பீட்டு அளவு பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்த வகைப் பொருட்கள் பட்டியலுக்கு அப்பால் வைத்தியசாலையினால் கொள்வனவு செய்யப்படும் வகைப் பொருட்கள் பட்டியல் ஒன்றும் அமைச்சுக்கு அனுப்பி பிரதான விலை மனுக் கோரலுக்கு உள்ளடக்கப்படுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சு அவர்களது வகைப் பொருட்கள் பட்டியலுக்கு மட்டும் கொள்முதல் மேற்கொண்டு விலைகளுக்கான அனுமதியைப் பெற்று வழங்கியுள்ளது.<br>ஆனால் வைத்தியசாலையில் உள்ள நோயாளிகளுக்கு இந்த சமைக்கப்படாத உணவுப் பொருட்களும் அவசியமாகக் காணப்படுவதனாலும் மற்றும் வேறாக விலை மனுக் கோரலை மேற்கொள்வது நிர்வாக ரீதியில் சிக்கலாகக் காணப்படுவதால் அமைச்சு அங்கீகரிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | | வழங்குநர்களிடமிருந்தே விலைகளைப் பெற்று வைத்தியசாலை கொள்முதல் குழுவின் அனுமதியுடன் விலைக்கு கொள்வனவு செய்துள்ளது. இதன் போது, பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய செயற்றிறன் பிணை முறிக்கு அல்லது ஒப்பந்தத்திற்கு வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதை அறியத்தருகிறேன். எவ்வாறாயினும் அதன் பின்னரான வருடத்தில் இந்த தவறு சீர்திருத்தப்பட்டுள்ளது. |
| | (ஊ) | மீளாய்வாண்டின் போது ரூபா 130,380,000 செலவில் Cardiac Catherization Laboratory இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு | |
| | (i) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.4.1 ஆம் வழிகாட்டல்களின் பிரகாரம், பொருள் கொள்வனவுக்கான கால அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் கூறு விலைகள் பகுப்பாய்வு செய்யப்படவில்லை | Cardiac, catherization ,laboratory இயந்திரத்தை விலைக்கு கொள்வனவு செய்தல். |
| | (ii) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.1.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழுவின் பரிந்துரை தொடர்பாக பொருட் கொள்வனவுக் குழு மிகுந்த சிரத்தையுடன் எதனையும் கருத்திற் கொள்ளவில்லை | விலைமனுக்கோருரல் திறந்து வைத்து பார்க்கும் போது இதுவரை வைத்தியசாலை பாவித்த படிவத்திற்கு ஏற்ப அறிக்கையிடப்பட்டுள்ளது எனவும் நடைமுறைச் சிக்கல்களின் காரணமாக பாவிக்கப்படாத படிவங்களை எதிர்காலத்தில் பாவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன். |
| | (iii) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.5.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் அமைச்சின் பொருட் கொள்வனவுக் குழுவினது தீர்மானத்தின்படி கூறு விலைக்குரிய ஒருவர் திறம்படத் தெரிவு செய்யப்பட்டிருந்ததாகவும் அதற்கு எதிராகப் புகார்கள் இருப்பின் அவற்றைச் சமர்ப்பிக்குமாறும் ஏனைய கூறு விலையாளர்களுக்கு அறிவித்திருக்கவுமில்லை | சகல சந்தர்ப்பங்களிலும் வைத்தியசாலையினால் கொள்முதல் தீர்மானங்களின் இரகசிய தன்மையை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டு கூற வேண்டும். |
| | (iv) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டலின் படி கூறு விலை ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் உடனடியாக முறையான ஏற்றுக்கொள்ளல் கடிதம் ஒன்று கூறு விலையாளருக்கு வழங்கப்படவில்லை | கொள்வனவு நடவடிக்கையின் போது விலைமனுக் கோரலின் மதிப்பீட்டுக்கு ஒரு பாரிய கால எல்லை செலவாகியுள்ளது. இந்த கொள்முதலுக்காக ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை, உயிரியல் வைத்தியப் பொறியியலாளர் பிரிவு, சுகாதார அமைச்சு மற்றும் கொழும்பு பொது வைத்தியசாலை போன்ற நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தொழிநுட்ப குழு அமைந்திருந்தது. அவர்களை ஒரே நேரத்தில் ஒன்று சேர்த்தலில் ஏற்படும் சிக்கல் நிலை காரணமாக கொள்முதல் நேர அட்டவணைக்கு ஏற்ப அந்த தினங்களில் உரிய விடயங்களை பூர்த்தி செய்ய முடியாமல் போயுள்ளது.<br>இத்தகைய நடைமுறைச் சிக்கல்களின் காரணமாக குறிப்பிட்ட தினங்களில் கால எல்லைக்குள் கொள்வனவினை மேற்கொள்வது கடினம் என்பதை குற்ப்பிட்டாக வேண்டும்.<br>அமைச்சின் கொள்முதல் குழுக்கள் தொடர்பில் வைத்தியசாலையால் |

| | | | |
|---|---|---|---|
| | | | நேரடியாக தலையீடு செய்ய இயலாது. தேர்ந்தெடுக்கபட்ட விலைமனுக் கோரல் தொடர்பில் ஆட்சேபனை தெரிவிப்பு சம்பந்தமாக அறிவிக்க முன்னர் ஒரு நிறுவனம் ஆட்சேபனையை தெரிவித்திருந்ததன் காரணமாக மீண்டும் ஆட்சேபனைகளை தெரிவிக்குமாறு கோரப்பட்டிருக்கவில்லை. விலைமனுக் கோரலினை ஏற்ற பின்னர் அது ஓடர் ஒன்றினூடாக அறிவிக்கபட்டிருப்பதனால் கொள்முதல் கடிதங்கள் மூன்று விநியோகிக்கபடவில்லை. ஓடர்களை விநியோகிப்பது வைத்தியசாலையின் சாதாரண செயற்பாடாகையால் அது பின்பற்றப்பட்டிருக்கின்றது . |
| | (v) | இயந்திரத்தின் செயற்பாடு தொடர்பாக 5 உத்தியோகத்தர்களுக்கு இயந்திரம் உற்பத்தி செய்யப்பட்ட நாட்டில் பயிற்சியளிப்பதற்கு ரூபா 3,030,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இத்தொகை 2018 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்த போதும், இவ்வறிக்கைத் திகதி வரை அப்பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை | வெளிநாட்டுப் பயிற்சியை பெற்றுக் கொடுப்பதற்காக அந்த நிறுவனம் உரிய பிரிவுக்கு அறியப்படுத்தியிருந்த போதிலும் அவர்களுடைய கருத்தாக அமைந்திருந்தது இந்த உபகரணத்தை சில . காலங்கள் பாவித்ததன் பின்னர் பயிற்சியில் கலந்து கொள்வது என்பதே . அதன் போது ஏற்படும் சிக்கலை தீர்த்துக்கொள்ள முடியும் என்பது அவர்களுடைய கருத்தாகும |
| | (vi) | தெரிவு செய்யப்பட்ட கூறுவிலையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலை ஆவணங்களின் பிரகாரம், 2017 மார்ச் 28 ஆம் திகதியளவில் இயந்திரம் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டு நிறுவப்பட வேண்டுமாயினும், இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பிரமாணங்களின்படி இவ்வியந்திரம் பயன்படுத்தப்படவுள்ள வளாகத்தினது சுவரின் கன பரிமாணத்தை 300 மில்லி மீட்டர் ஆகத் தயாரிப்பதற்கு வைத்தியசாலை நடவடிக்கை எடுக்காததால் இயந்திரத்தை நிறுவுதல் 2017 ஆகஸ்ட் 18 வரை 04 மாத கால தாமதத்திற்குள்ளானதுடன் அதன் காரணமாக வழங்குநருக்கு ரூபா 478,980 கொடுப்பனவு செய்ய வேண்டியேற்பட்டது | பழைய இயந்திரத்தை அகற்றி அந்த இடத்தில் இந்த இயந்திரத்தை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பின்னர் அந்த தீர்மானத்தை மாற்றி பழைய இயந்திரத்தை அந்த இடத்தில் வைத்துவிட்டு அதற்கு அருகில் அமைந்துள்ள அறை ஒன்றில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு எற்ப அந்த பிரதேசத்தை அணுசக்தி அதிகார சபையின் ஒழுங்கு முறைகளுக்கேற்ப தயார் செய்ய வேண்டி இருந்ததால் சுமார் 3 மாத கால தாமதம் நிறுவும்போது ஏற்பட்டுள்ளது. |
| | (எ) | மீளாய்வாண்டின் போது ரூபா 3,903,000 செலவு செய்து 14 கொள்கலன்கள் (Containers) வாடகைக்குப் பெறப்பட்டிருந்தன. எனினும் அரசாங்கப் பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்படவில்லை | இது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதனால் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவில்லை என்பதுடன் அது தவறு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். |
| 6.1.2 | ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு<br><br>பூந்தோட்டம் மற்றும் சுத்தகரிப்புப் பணி புரிபவர்களுக்கான வேலைத் தளத்தையும் அலுவலகத்தையும் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ரூபா 87,019,408 வரியற்ற ஒப்பந்தப் பெறுமதியில் 2016 நவம்பர் 09 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன | | |
| | (அ) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.6 ஆம் வழி காட்டலின் பிரகாரம், குறித்த மாதிரிப் படிவத்தில் கூறு விலைகளைத் தறக்கும் அறிக்கைகள் அறிக்கையிடப்பட வேண்டுமாயினும், அதற்கொனக் குறிப்பிடப்பட்ட மாதிரிப் படிவம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. பேணப்பட்ட | விலைமனுக் கோரலை திறந்து வைத்து பார்க்கும் போது உரிய படிவங்கள் சம்பந்தமாக சில சந்தர்ப்பங்களில் விசாரணைகள் நடாத்தப்படவில்லை .உரிய ஆவணங்களுக்கு ஏற்ப அறிக்கையிடும் சிக்கல் காரணமாக அது |

| | | | |
|---|---|---|---|
| | | கூறு விலைகளைத் திறக்கும் அறிக்கையில் கூறு விலையாளரது பெயர் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், கூறு விலையினது பெறுமதி மாறுபட்ட கூறு விலைகளது கூறு விலைப் பெறுமதி, கூறு விலைப் பிணையினது பெறுமதி போன்ற தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. மேலும், கூறு விலைகளைத் திறக்கும் குழுவினது ஒரு அங்கத்தவர் மாத்திரமே அவ்வறிக்கையில் கைச்சாத்திட்டிருந்தார் | மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் எதிர் காலத்தில் அதனை சீர் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த விலைமனுக் கோரல் .திறந்து வைப்பு 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் அந்த காலப் பகுதியில் விலைமனுக் கோரலின் திறந்து வைப்பின் போது இரண்டு அங்கத்தவர் மட்டுமே இருந்துள்ளனர். அதில் ஒரு அங்கத்தவரால் சமூகமளிக்க முடியாமல் போனதுடன் ஒரு அங்கத்தவர் மட்டுமே சமூகமளித்தனர். இந்த விலை மனுக் கோரலின் போதும் அவ்வாறான ஒன்றே இடம் பெற்றுள்ளது. ஆனால் வருடத்தின் மே மாதத்தின் பின்னர் அது திருத்தப்பட்டிருக்கின்றது. |
| | (ஆ) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.8 ஆம் பந்தியின் பிரகாரம், பெறப்பட்ட சகல கூறு விலைகளும் ஆரம்பப் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், பெறப்பட்ட 10 கூறு விலைகளில் குறைந்த விலையுடைய 4 கூறு விலைகள் மாத்திரமே பகுப்பாய்வு செய்யப்பட்டிருந்தன | கொள்முதல் வழிகாட்டிக் கோவையின் 7:9:1 க்கு ஏற்ப விலைமனுக் கோரப்படும் ஆவணங்களில் கணிசமான பதிலை (substantial Responsiveness) கொடுக்கும் விலைமனுக் கோரல் எனினும் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட விலைமனுக் கோரல் மட்டுமே அதாவது விடய ரீதியான அனுப்புதல்கள் அற்ற முழுமையான மதிப்பீட்டிற்காக கருத்தில் கொள்ளுதல் வேண்டும். பொறியியளாளர்களின் கருமங்கள் தொடர்பிலான மத்திய ஆலோசனை பணியகத்தினுடாக (CECB) மேற்கொள்ளப்பட்டிருப்பது விரிவான மதிப்பீடாக காணப்படுவதுடன் ஆரம்ப மதிப்பீட்டின் போது சகல விலைமனுக் கோரல்களும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. |
| | (இ) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.3 ஆம் வழிகாட்டல்களின் பிரகாரம், கூறு விலைப் பகுப்பாய்வுக்கு மதியுரையாளர் ஒருவரது சேவை பெறப்படுமாயின் அது தொழிநுட்பப் பகுப்பாய்வுக்குக் குழுவினது மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ் நடைபெற வேண்டுமாயினும், மதியுரை நிறுவனம் மேற்கொண்ட பகுப்பாய்வின் பொருட்டு தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழுவின் மேற்பார்வையும் வழிகாட்டலும் வழங்கப்படவில்லை. மதியுரை நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில் தொழில்நுட்பப் பகுப்பாய்வுக் குழு தனது பரிந்துரையைச் சமர்ப்பித்திருந்தது. | இந்தச் செயற்றிட்டத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு வழங்கப்பட்டிருந்தது. பொறியியளாளர் கருமங்கள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்திற்கே(CECB). இதனால் அந்த பணியகத்தினால் சுயாதீனமான மதீப்பிட்டு அறிக்கையையும் பெற்றுக் கொள்வதனுடாக விலைமனுக் கோரலின மதிப்பீடு மேலும் வெளிப்படைத் தன்மையுடன் இடம்பெற்றது. |
| | (ஈ) | கூறு விலை ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட 4.1 (i) இலக்கமுடைய கூறுவிலையாளர்களின் பொருட்டான அறிவுரையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட 3 ஆம் குறைந்த விலையுடன் கூறுவிலையாளர் சமர்ப்பிக்க வேண்டிய கையில் உள்ள வேலைகள் தொடர்பான விபரம் மற்றும் தற்போது உள்ள வேலைகளுக்குத் தேவையான தொழிற்படு மூலதனத் தேவை பூரத்தி செய்யப்படலாமென உறுதி செய்யும் ஆவணம் என்பன சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே, கூறு விலையாளர் சமர்ப்பித்த கடந்த 5 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், கூறு விலையாளரின் நிதி நிலைமை சிறந்த நிலையில் இருக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டபோதும், அவ்விடயம் கருத்திற் | EMP நிறுவனத்தினால் அதன் கையில் இருக்கும் வேலைகள் தொடர்பிலான விபரம் ஒன்றை விலைமனுக் கோரலின் .ஆவணங்களுடன் சமர்ப்பித்திருப்பதுடன் அந்த ஆவணங்கள் சட்டத்தரணி ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.<br>கடந்த வருட காலங்களின் கணக்கு அறிக்கைகளை கருத்திற் கொள்ளும்போது EMP நிறுவனத்தினால் நேர்மறையான முகவர் மூலதன நிலை ஒன்றை பேணிச் சென்றுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்ளப்படாது தொழில்நுட்பப் பகுப்பாய்வுக் குழு இக் கூறுவிலையாளரை தெரிவு செய்வதற்கான சிபார்சை வழங்கியிருந்தது | |
| | (ஊ) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்த வழங்கல் கடிதம் வழங்கப்பட்டிருந்தபோதே இரு சாராரும் உடன்படிக்கையில் ஈடுபட வேண்டுமாயினும், ஒப்பந்தம் வழங்கப்பட்டு 219 நாட்களின் பின்னரே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது | ஒப்பந்தத்தை வழங்கியதன் பின்னர் செயற்றிட்ட வேலைக்கான இடத்தை கையளித்தலை மேற்கொள்வதற்கு சிறிது காலம் எடுத்துள்ளது. அந்த தாமதத்தின் காரணமாக ஒப்பந்தத்தை தயார் செய்தல் மற்றும் கைச்சாத்திடல் தாமதமாகியுள்ளது. எவ்வாறு இருப்பினும் ICTAD ஒப்பந்தத்திற்கு ஏற்ப ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் வரை ஏற்றுக் கொள்ளப்பட்ட கடிதத்தை ஒப்பந்தமாக செல்லுபடியானதாக ஏற்றுக்கொள்ள முடியும். அதற்கு ஏற்ப அந்த கால எல்லைக்குள் சட்டபூர்வமான ஒரு பாதுகாப்புடைய கடிதத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| | (ஊ) | கூறுவிலை ஆவணங்களில் குறிப்பிடப்படும் 4.14 ஆம் இலக்க ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம், ஒப்பந்தகாரர் மாதாந்த செயல் முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கவில்லை. 2017 சனவரி 30 அன்று ஒப்பந்தம் ஆரம்பமாகி 2018 ஏப்ரல் 29 ஆம் திகதி பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதும், ஊழியர்களையும் நியமங்களுடன் கூடிய மூலப் பொருட்களையும் ஒப்பந்தகாரர் வழங்காமையால் ஒப்பந்தத்திற்கான செயல் முன்னேற்றம் எதிர்பார்த்தவாறு பூர்த்தி செய்யப்பட முடியாது போனதுடன், 2018 ஏப்ரல் 06 ஆம் திகதியளவில் First Flow Slab வரை மாத்திரமே வேலை முடிவடைந்திருந்தது. | இது தொடர்பில் பல சுற்றுக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டிருப்பதுடன் தற்போதாகும் போது தீர்மான வேலையில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தை இரத்து செய்தால் ஏற்படும் சிக்கல் நிலைமைகளை கருத்தில் கொண்டு இந்த ஒப்பந்தக்காரர் ஊடாகவே எதிர்காலத்தில் நிறைவேற்றி செல்வது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப சரியானது என தென்படுவதால் இது மேலும் முன்னெடுத்து செல்லப்படும். |
| | (எ) | கூறு விலை ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட 14.5 ஆம் இலக்க (Contract Data) க்கமைய, கொடுப்பனவு செய்யக் கூடிய இடைக்கால விலைப்பட்டியலது குறைந்த பெறுமதி ரூபா 3,200,000 ஆகும். எவ்வாறாயினும், ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்த இரு இடைக்கால விலைப்பட்டியல்களான முறையே ரூபா 1,733,666 மற்றும் ரூபா 1,708,771 என்பவற்றிற்கும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிர்மாணிப்பு ஒப்பந்தக் காரரின் நிதி நிலைமை பலவீனமாக கணப்பட்டதால் செயற்றிட்டம் சற்று தாமதமாகி இருந்தமையை காரணமாகக் கொண்டு விசேட தேவையாக கருதி ஆலோசனை நிறுவனத்தின் பேரில் இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் மீண்டும் அத்தகையதொரு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும் ஒப்பந்தங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 6.2 | | தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்<br><br>2017 யூன் 09 ஆம் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான குழு வழங்கிய கட்டளை நிறைவேற்றப்பட்டிராத சந்தர்ப்பங்கள் வருமாறு<br>பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், கணக்காளர் போன்ற பதவிகளுக்கான தகைமைகள் தொடர்பாகத் தேவையான திருத்தங்களைச் செய்ததன் பின்னர் 2 மாதத்திற்குள் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென பொது முயற்சிகள் தொடர்பான குழு கட்டளை வழங்கியிருந்த போதும் இவ்வறிக்கைத் தினம் வரை அந்த அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை | இந்த பதவி தொடர்பான ஆட்சேர்ப்பு நடைமுறை படிவக்கோவைக்கு அனுமதி பெற்றுக்கொள்ள முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு சமர்பிப்பதுடன் இதுவரை அனுமதி கிடைக்கப் பெறவில்லை |
| 7. | | முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | |

<table>
<tr><td></td><td>கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது வைத்தியசாலைச் சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் முகாமைத்துவத்தின் விசேட கவனம் தேவைப்படுகின்றது</td><td></td></tr>
<tr><td></td><td>(அ)
<table>
<tr><td></td><td>கட்டுப்பாட்டுத் துறை</td><td>அவதானிப்புகள்</td></tr>
<tr><td>(அ)</td><td>நிலையான சொத்து பதிவேடு -</td><td>கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிலையான சொத்துக்களது கணனி அச்சுப் பதிவேட்டில் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் மாத்திரமே உட்சேர்க்கப்பட்டுள்ளதுடன், சகல நிலையான சொத்துக்களும் நேரடியாக இனங்காணப்பட்டு அவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு பதிவு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை</td></tr>
<tr><td>(ஆ)</td><td>கையிருப்புக் கட்டுப்பாடு</td><td>காலாவதியாகிய கையிருப்பு சரிவர இனங்காணப்படவில்லை</td></tr>
<tr><td>(இ)</td><td>பதவியணி நிர்வாகம்</td><td>முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அதனை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை</td></tr>
<tr><td>(ஈ)</td><td>ஒப்பந்த நிர்வாகம்</td><td>ஒப்பந்த வேலை தாமதமின்றி நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் அரசாங்கக் கொள்வனவு வழகாட்டிக் கோவையின் சில ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை</td></tr>
<tr><td>(உ)</td><td>கொள்வனவுக் கட்டுப்பாடு</td><td>தேவையைச் சரிவர இனங்காணாது வைத்திய உபகரணங்களைக் கொள்வனவு செய்தலும் உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் வழங்குநர்களது சேவையைப் பெறுவதற்கு</td></tr>
</table>
</td><td>(அ) (ஆ) (இ) (ஈ) (உ) (ஊ) (எ) (ஏ) கணக்காய்வுகளில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் முறைமை மற்றும் முகாமைத்துவ குறைபாடுகள் முகாமைத்துவத்தின் அவதானத்திற்கு உள்ளாகி இருப்பதுடன் அந்த குறைபாடுகளை தவிர்த்து கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்</td></tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கை எடுக்காமையும் | | |
| | | (ஊ) | கணக்கீடு மற்றும் கணனி மென் அணிப் பாவனை | **i.** நாட்குறிப்பு இலக்கம், கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் மற்றும் ஒரே விடயம் இரு தடைவைகள் பதிவு செய்யப்படுதல் தொடர்பான விபரம் கணனி முறைமையில் உள்ள பேரேட்டுக் கணக்குகளில் குறிப்பிடப்படாமை | | |
| | | | | ii. 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 24,125,003 கூட்டுத் தொகையுடைய 3 நாட்குறிப்புக்களுக்கு அங்கீகாரம் பெறப்படாமை | | |
| | | | | iii. 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 27 கடன்பட்டோர் கணக்குகளில் ரூபா 27,373,267 செலவு மீதி இருத்தல் | | |
| | | | | iv. 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 26 கடன் கொடுத்தோர் கணக்குகளில் ரூபா 21,567,527 வரவு மீதி இருத்தல் | | |
| | | | | **v.** வைத்தியசாலைக் கட்டண வருமானத்தைக் கணக்கிலிடுவதற்கு நிறுவப்பட்ட Systolic கணனி மென் அணி முறைமையில் பல்வேறு வகை வருமானத்தைக் கணக்கிலிடுவதற்காக வெவ்வேறான கணக்குச் சுட்டுக்களை (code) அறிமுகஞ் செய்திராமை, ஒரு வருமானப் பேரேட்டுக் கணக்குச் சுட்டின் கீழ் பல்வேறு வகை வருமானம் கணக்கிலிடப்பட்டமை, அவ்வாறான பேரேட்டுக் கணக்கு மீதி சிலவற்றின் கூட்டுத் தொகை மூலம் மீதி பரீட்சை தயாரிக்கப்பட்டுள்ளமை, அந்த முறைமையில் வைத்தியசாலைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படுவதைக் (Refund) கணக்கிலிடுவதற்கான | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | விதி முறைகள் இனங்காணப்பட்டிராமை | | |
| | | | | | vi. பணம் கொடுப்பனவு செய்யப்படும் வார்ட்டுகளில் சிகிச்சை பெறும் ஒவ்வொரு நோயாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட வைத்தியசாலைக் கட்டணம் மற்றும் தொழில்சார் கட்டணம் என்பன வெவ்வேறாக Systolic கணனி முறைமையின் மூலம் பெறப்பட முடியாமை மற்றும் தொழில்சார் கட்டணத்தை கணக்கிலிடுவது தொடர்பான விதிமுறைகளுடன் கூடிய முறையான நிர்வாக முறைமைகளை அறிமுகஞ் செய்திராமை | | |
| | | | | | vii. மீளாய்வாண்டின்போது வைத்தியர்கள் மற்றும் ஏனைய பதவியணியினரின் பொருட்டு நோயாளர்களிடமிருந்து அறவிட்ட தொழில்சார் கட்டணம் ரூபா 341,094,920 ஆகும். இதில் ரூபா 511,644 மாத்திரமே வைத்தியசாலை வருமானத்தில் செலவு வைக்கப்பட்டமை மற்றும் தொழில்சார் கட்டண அறவீடு, திருப்பிச் செலுத்தும் பணம் தொடர்பாகப் பதவியணியினரை ஈடுபடுத்தல், பதவியணியைப் பணியில் அமர்த்தல், கணனி மென் அணியைப் பேணுதல், வங்கிக் கணக்கைப் பேணுவதற்கான கிரயம் மற்றும் பிற மேந்தலைக் கிரயம் தொடர்பான பகுப்பாய்வு என்பன நடைபெறவில்லை | | |
| | | | (எ) | நிதிக்கட்டுப்பாடு | இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளின் முன் பக்கத்தே "இரத்துச் செய்யப்பட்டது" எனக் குறிப்பிடப்படாமை | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | (ஏ) | வாகனக்கட்டுப்பாடு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களது எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்படாமை | | |

# 6. எதிர்கால தொலைநோக்கு



# 6.1 நிறுவனத்தின் செயற்றிறன் மேம்பாட்டை அதிகரிக்க எதிர்பாரக்கும் இடைக்கால நடைமுறைகள்

| நோக்கம் | செயற்பணி |
|---|---|
| 1 . நோயாளிகளுக்கு, பார்வையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கான மருத்துவமனை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | i தாதிகளின் உத்யோகபூர்வ இல்லத்தின் நிர்மாணம் (நடைமுறைப்படுத்தப்படுகின்றது)<br>ii கேட்போர் கூடத்துடன் நிர்வாக மற்றும் நிதிக் கட்டடத்தினை நிர்மாணித்தல் ((நடைமுறைப்படுத்தப்படுகின்றது)<br>iii கைத்தொழிற்சாலை கட்டடத்தின் நிர்மாணம் ((நடைமுறைப்படுத்தப்படுகின்றது )<br>iv தாதிகள் ( ஆண்) உத்யோகபூர்வ இல்லத்தின் நிர்மாணம் (நடைமுறைப்படுத்தப்படுகின்றது )<br>v ஆறாவது மாடியில் கொடுப்பனவு வாட்டுத் தொகுதியினை நிர்மாணித்தல் (நடைமுறைப்படுத்தப்படுகின்றது )<br>vi பிரதான கட்டடத்தில் காணப்படும் கூரையில் சூரிய சக்தி பனலினை |
| 2. விஸ்தரித்தல் | i. சத்திர சிகிச்சைக் கூடத் தொகுதியினை விரிவாக்கம் செய்தல்.<br>ii. புதிய வாகன நிறுத்தும் வசதிகள்.<br>iii. முக்கிய ஆய்வகங்களை விரிவாக்கம்.செய்தல்.<br>Iv .உயிர் மருத்துவ பொறியியல் பிரிவு.<br>V. மருத்துவ பரிசோதனை அலகு மற்றும் அதன் சேவைகளை விரிவாக்குதல்.<br>Vi. இருதய நோய் அலகின் விரிவாக்கம்.<br>vii. CSSD அலகை விரிவாக்கம் செய்தல்.<br>Viii .சலவை செய்யும் வசதிகள். |
| 3. காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | i. வாட்டுக்களுக்கு எல்ஈடி விழக்குகளைப் பொருத்துதல் (நடைமுறைப்படுத்தப்படுகின்றது).<br>ii வைத்திய சாலைகளில் படுக்கைகளை சேவிஸ் செய்தல்<br>iii. புதிய வைத்திய சாலைகளைப் பதிவு செய்தல் மற்றும் பட்டியல் தாயரிக்கும் கருமபீடத்தினை ஏற்படுத்துதல்.<br>iv. பாதுகாப்பு சோதனை மற்றும் மருத்துவமனை நுழைவாயிலினை மேம்பாடு செய்தல்.<br>v. தீ பாதுகாப்பு அமைப்பினை மீண்டும் பொருத்துதல்.<br>vi. எம் ஆர் ஐ எடுக்கும் இயந்திரத்தினை கொள்வனவு செய்தல் (கட்டளை இடப்பட்டுள்ளது) மற்றும் ஏனைய வைத்திய உபகரணங்களை வழங்குதல். |
| 4. மனிதவள அபிவிருத்தி | i எல்லாப் பணியாட்களுக்கும் திறைமையின் அடிப்படையில் பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் திட்டத்தினைத் தயாரித்தல்.<br>ii. விற்பனை மற்றும் வர்த்தக அபிவிருத்தி பிரிவினை தாபித்தல்.<br>iii. பணியாட்களை அதிகரித்தல். |

Sri Jayewardenepura General Hospital

Thalapathpitiya,Nugegoda,Sri Lanka

Phone No: +2779041 Fax: +94112778661

E-mail: planningsjgh@gmail.com

srijayewardenepurahospital@gmail,com

Website:www.sjghsrilanka.org